2530.

CONTENTS.

	Page.
Agriculture in India	169
Amusing Anecdotes of Children	265
Attar of Roses	207
Authority and Obedience (a dialogue)	237
Bamboo, The	194
Borrowing, The Danger of	25
Boyhood of an Author, The	145
Burmah and Siam	127
Cats	167
Child's Corner	35, 82, 129, 173, 219, 266
Chinese Politeness	77
Curious Newspapers	205
Florence Nightingale, the Celebrated English Nurse	197
Fresh Air	109
Gardener's Daughter, The	28
Indian Braggard, An	59
Ingratitude	182, 249
Iron-worker and his Fiddle, The	105
Island of Salsette, The	154
Leaf for Curing Quarrels, The	18
Little Dove, The	66
Lord Ripon's Visit to Madras	30
Miscellaneous:—*	
First Invader of India, The	227
Glorious Sights at Sea	89
Himalayas, The	43
Icy Regions, The	135
Lord Dufferin—the new Viceroy	181
Runjeet Sing	1
Model Husband, A	258
News	42, 88, 134, 180, 225, 274
Not Lost, but Gone Before	250
Nutmeg, The	102
Patient Thought	74
Perseverance and its Value	160
Prince Leopold, The Late	80
Respect for Elders	19
Satchel Bearer, The—A story.	9, 50, 93
Sense of Taste, The	118
Sensation of Sound, On the	191
Sir Salar Jung	45
Something about Bees	214
Sponges	171
Story of a Good Woman, The	147
Touch-me-not, a Plant	248
Tunjatteluttachan, the Malayalam Poet	209
Visvandhara, The Story of	121, 155
What is He Good for?	68
When were you Vaccinated?	137
Wind and Rain—a Dialogue	4
Woollen Mills for India	254
Wonderful Bell, A	32

* The papers under this head are all Illustrated by first class Photos or Engravings.

பொருளட்டவணை.

விஷயம்	பக்கம்
அதிகாரம் செலுத்துவதும் அடங்கி நடப்பதும். (ஒரு சம்பாஷணை.)	237
அவன் எதற்கு உதவுவான்?	68
அற்புதமான ஒருமணி	32
இத்தேசத்து வியவஸாயம்	169
உத்தமனை கணவன்	258
உனக்கு வைசூரி குத்தியதெப்போ?.	137
ஒரு உத்தமஸ்திரீயின் கதை	147
ஒரு தோட்டக்காரன் மகள்	28
ஒரு பண்டிதருடைய பாலப்பருவம்.	145
ஒரு மாடப்புறு	66
ஒலி கேட்பதெப்படி	191
கடற்பாசி	171
கடன்படுவதனல் வரும் கெடுதி	25
கம்பளம் நெய்யும் யந்திரம் இந்தியாவில் இல்லாதகுறை	254
கருமாரப்பிள்ளையும் கின்னரவாத்தியமும்	105
கலகத்தை அடக்கும் ஔஷதி	18
காற்றுக்கும் மழைக்கும் நடந்த ஒரு சம்பாஷணை	4
குழந்தைகள் சொல்லும் இனிய வார்த்தைகள்	265
கையிலாகாத வீண்ஜம்பக்காரன்	59
சமாசாரம்,	42, 88, 134, 180, 225, 274
சிறுவர்க்கான கதை,	35, 82, 119, 173, 219, 266
சீனதேசத்தார் செய்யும் மரியாதை.	77
செய்ந்நன்றியறியாமை	182, 249
தூக்குத்தூக்கி—ஒரு பழைய கதை.	9, 50, 93
தேனீக்களைப்பற்றிய சில குறிப்பு...	214
தொட்டாற்சுருங்கி	248
நாக்கும் சுவையுணர்ச்சியும்	118
நிதானித்து யோசித்தல்	74
பலவிஷயத்திரட்டுகள்:—*	
இந்துதேசத்தின்மேல் முதல்முதல் படையெடுத்த போர்வீரன் ...	227
இமயமலை	43
உறைபனி அடர்ந்த நாடுகள்	135
கடலின் சிறந்த காட்சிகள்	89
ரணஜித்சிங்கு	[illegible]
ராஜப்பிரதிநிதியாகிய டப்பிரின் பிரபு அவர்கள்	18[illegible]
பரிசுத்தமான காற்றைப்பற்றி	10[illegible]
பர்மா, சீயம் தேசங்கள்	127
பூனையைப்பற்றி	167
பெரியோர்களைப் பெருமைப்படுத்தல்	19[illegible]
ப்ளாரென்ஸ் நைதிங்கேல் என்னும் பரோபகாரி	197
மலையாள நாட்டுக் கவியாகிய குஞ்சத் தெழுத்தச்சன் சரித்திரம்	209
முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்	160
மூங்கில்	194
மேலேபோவதேயொழிய மாண்டு போவதில்லை	250
ரிப்பன் பிரபுவின் நல்வரவு...	30
ரோஜா அத்தர்	207
லியபோல்ட் என்னும் ராஜகுமாரன்.	80
விசித்திர வர்த்தமான பத்திரிகைகள்.	205
விச்வந்தரராஜன் கதை ... .121,	155
ஸர் ஸாலர் ஜங்	45
ஸால்ஜெத் என்னும் தீவு	154
ஜாதிக்காய்	102

---

* இதற்கடியில் வரும் விஷயங்கள் படங்களோடு பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன



TOMB OF RANJEETSING.—ரணஜித்சிங் கோரி.

ஜ்ஞவிநோதிநி.

இல. 1, 2.] { ஜனுவரிமீ / பெப்ருவரிமீ } 1884. [புஸ்த. XV.

ரணஜித்சிங்கு.

இத்தேசத்தின் வடமேற்கிலுள்ள பஞ்சாப் என்கிற பாஞ்சாலம் அல்லது லாஹோர் தேசத்தில் சீக்கியஜாதியார்க்குத் தலைவனாய் சீக்கிய அரசாட்சியை ஸ்தாபித்தவனான ரணஜிதசிங்கு என்பவன் 1780-ம் வருஷம் பிறந்தவன். அவனுடைய தகப்பனான மகாசிங் என்பவனும் சீக்கியர்களுக்குத் தலைவனாயிருந்தவனே. சீக்கியர் என்ற ஜாதியார் இத்தேசத்தில் மொகலாயராஜ்யம், போர்த்துகீஸ் ராஜ்யம் இவைகள் ஏற்படுவதற்குமுன்னமே, பிரசித்திபெற்றிருந்த தாகத் தெரியவருகின்றது. அவர்கள் ஜாதிக்கட்டுப்பாடில்லாத ஒரு புதிய சமயத்தார். முதலில் இந்த மதத்தை ஏற்படுத்தினவன் பெயர் நானக்ஷா. அவர்கள் ஆதியில் மதாசாரவிஷயங்களையே பாராட்டிவந்தவராயிருந்தாலும், இத்தேசத்தில் மொகலாயராஜ்யம் க்ஷீணித்துவந்தகாலத்திலே நாடுபிடித்து அரசாளவேண்டுமென்கிற கருத்து உள்ளவரானார்கள். சிறிது சாமர்த்தியமுள்ள ஒவ்வொருவனும் தன்கீழ்ப் பல வீரர்களைச் சேர்த்து ஒவ்வொரு அரசனெனப் பெயர்பெற்றுக்கொண்டு சதத்துரு நதியின் கரையோரங்களையெல்லாம் கைப்பற்றலானான்.

இப்படியிருக்கும் காலத்தில் ரணஜித்சிங்கு என்பவன் பிரசித்தனாகி ஆப்கன்தேசத்து அரசனான ஜிமான்ஷா என்பவனுடைய உதவியைக்கொண்டு லாஹோர் ராஜ்யத்துக்கு அதிபதியாயினான். ஸாதாரணமானவர்களைப்போல் அடங்கியிருக்கின்ற தன்மை அவனிடத்திலில்லாமையால், அங்கங்கே சிதறிக்கிடந்த சீக்கியர்களையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து உறுதியான கட்டுப்பாடுடையதாய்ச் சிறந்த ராஜாங்கமொன்று ஸ்தாபிக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டவனாகி அதற்காக விடாமுயற்சியுடன் பாடுபட்டுவந்தான். ஒரு தடவை அரித்துவாரம் முதலியவற்றிற்குத் தீர்த்தயாத்திரை போவதாகப் பாவனைசெய்து புறப்பட்டான். பாஞ்சாலதேசத்திற்குக்

கிழக்கே உள்ள அங்கிலேய அரசாட்சியின் ஒழுங்கையும் பலா பலங்களையும் பார்த்துவரவேண்டுமென்ற கோரிக்கையை மனதில வைத்துக்கொண்டே அவன் அந்த யாத்திரைக்குப் புறபபட்டான் என்கிறார்கள். பிறகு ரணஜித்சிங்கு சதத்துரு நதிக்கு மேற்கிலும் வடக்கிலும் பல நகரங்களைப் பிடித்து அங்கிருநத சிககியர்களையெல்லாம் தன் வசப்படுத்திககொண்டான்.

இவ்விதமாக ரணஜித்சிங்கு கொஞ்சம் கொஞ்சமாய் லாஹோர் நகரத்தைசசுற்றி உளள நாடுகளைக் கைககொண்டு தெற்கே மூல்தான் அல்லது மூலஸ்தானம் வரையிலும், மேற்கே பிஷாவர்பட்டணம வரையிலும், வடக்கே காச்மீரம்வரையிலும் சுவாதீனம் செய்துகொண்டான். கிழக்கேமாத்திரம் சதக்துருநதியானது அவனுடைய செங்கோல் அப்புறம் செல்லுதற்குப பெருந்தடையாயிருநதது. அந்நதியை அவன் தாண்டிவரவொட்டாமல் அங்கிலேயர் அதற்கு வேண்டிய காவல்செய்துகொண்டிருந்தாாகள். அங்கிலேயருக்கும ரணஜிதசிங்குக்கும்கூட முதலில் சிறிது மனஸ்தாபங்கள் இடைஇடையே நேரிட்டுப் பிறகு சமாதான உடன்படிககை ஒன்று செய்யபபட்டது. அதனால் சதததுருநதியின் மேலண்டைககரை சீக்கியருடையதென்றும், கீழண்டைக்கரை அங்கிலேயருடையதென்றும் எல்லைக்கோடு ஏற்பாடாகி அப்படியே நெடுநாள் நடந்துவந்தது. ஒரு தடவையில் ரணஜித்சிங்கு ஆப்கன் தேசத்தரசனான ஷாஷுஜா என்பவனுக்கு உதவிசெய்து அவனிடமிருந்த ஒளிமலையெனப் பொருள்படும கோகினூர் என்னும் வயிரமணியைக் கைக்கொண்டான். அம்மணியைததான் ஆங்கிலேயவீரர் அவனிடத்தினின்றும் வாங்கிக்கொண்டுபோய் இப்போது நமது மகாராணியாருடைய கிரீடததில் வைத்திருக்கின்றனர். அம்மணியின் வரலாற்றைப்பற்றிச் சென்ற 1880 வருஷதது ஜநவிநோதினியில் எழுதியிருக்கிறோம்.

இவ்வகையாக ரணஜித்சிங்கு வரவரப் பிரபலனாகி முதலில் தான் கோரியபடியே ஒரு பெரிய தேசாதிபதியாயினான். 1831-ம் ஷத்தில் இவனுடைய கீர்த்தி எங்கும் விசேஷமாய்ப் பரவியது. தூரதேசத்தரசர்களும் சிற்றரசர்களும பிரபுக்களும் அவனிடத்தில் மிகவும் கௌரவம்பாராட்டி அவனுடைய சிநேகத்தை விரும்பினார்கள். அவர்களுக்குள் ஏதாவது விவாதம் நேரிட்டால் அப்பொழுது இவ்வீரனையே மததியஸ்தமாகக் கோரிக்கொளவார்கள. சிந்துநதிக்கு மேலண்டைககரையிலுள்ள பெலூசிஸ்தானத்து அரசன் சிறந்த குதிரைகளைப் பரிசாகக் கொடுத்தனுப்பித தன் நாட்டில் சத்துருபயமில்லாமல இருப்பதற்கு உதவிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஹீராத்துதேசத்து அதிபதியான ஷாமாமூத என்னும் துருக்கியனும், சிந்தியா ராஜ்யத்து அதிபதியான மகாராஷ்டிரப் பிரபுவும் பததிரிகைகள் எழுதி அவனுடன் நட்பு

பாராட்டினார்கள். ருஷியாதேசத்தரசனுக்கும் இவனுக்கும கூடக் கடிதங்கள் போகவர ஆரம்பமாயினவென்றும அங்கிலேயர் சந்தேகிக்கலானார்கள். இவனுடைய விரோதமிருந்தால் தங்களுக்கு வர்த்தகம் செழிக்கவும செங்கோல் ஓங்கவும வழியுண்டாகாதென்று கண்டு அங்கிலேயரும் அவனுக்கு இன்சொற்சொல்லி ஒற்றுமையாய் நடக்க ஆரம்பித்தனா. ஆனாலும் ரணஜிதசிங்கு அங்கிலேயதுரைத்தனத்தார விஷயததில் எப்போதும் உண்மை தவறாமலே நடந்துவநதான்.

இபபடி ஏகசக்ராதிபதியாய் அரசுசெலுத்தி வெற்றிவேந்தனாயிருந்த இவ்வரசன் தன் நாட்டை மேனமேலும் பரவச்செய்யவேண்டுமென்று எப்போதும் போரும் கையுமாய் இருந்ததைவிட்டு, தன் துரைத்தனத்தைச் சீர்ப்படுததவும ஜனங்களுடைய சவுக்கியத்துக்கு வேண்டிய சட்டதிட்டங்கள செய்யவும் முயன்றிருந்தால் அந்த ராஜ்யம வெகு சீர்திருத்தம் பெற்றிருககும். அப்படிப்பட்ட யோசனை அவன் புத்தியிலாயினும மற்றச் சிக்கியர்களுடைய புத்தியிலாயினும் ஒருபோதும் உதிக்கவில்லை. இது ஸஹஜமானதுதான்: நூதனமாய்த் தலையெடுத்த எவனும் மேன்மேலும் விருத்தியடையவேண்டுமென்ற நோக்கங்கொண்டிருப்பானேயொழிய, அதற்கு ஒரு தடை நேரிடுமளவும், உள்ளதைக் காத்துக்கொண்டு அவ்வளவோடு திருப்தியடைந்து சுகமாயிருப்போமென்ற கருத்துள்ளவனாயிரான்.

ரணஜித்சிங்கு இப்படியாக வெகுகாலம் யாவர்க்கும் மேலாய்ப் பேரும் புகழுமாகச் சிங்கத்தைககண்ட யானைபோல அனைவரும் அஞ்சும்படி அரசுசெலுத்திக்கொண்டிருநதான். வாலிபத்தில் இவன் மிக்க சுறுசுறுப்பும் அவயவலாகவமும் உடையவனாயிருந்தான். அவன் வடிவத்தில் குட்டையானவனேயொழிய ஆஜானுபாகுவாய் உயர்ந்திருப்பவனன்று; வயதுமுதிர்நதபோது பலவீனனாய்ப் பெருத்துபபோய்விட்டான். கடைசியில் தேகசவுக்கியம் தப்பி 59-வது வயதான 1839 வருஷத்தில் இறந்துபோனான்.

ரணஜித்சிங்கினுடைய பெருமைகளை இங்கே ஒருவாறு சுருக்கிச் சொல்வோம். அவன் ஆட்சிக்கு வந்தகாலத்தில் பாஞ்சாலதேசத்துக் குடிகளும் குறுநிலமன்னர்களும் சிறிதும் கட்டுப்பாடில்லாமல் நெல்லிக்காய்மூட்டைபோலச் சிதறித் தலைக்குததலை பெரியதனம் செய்துவந்ததுமல்லாமல், தெற்கே மஹாராஷ்டிரர்களும் மேற்கே கபிலதேசத்துத் துருக்கரும் போர்க்கிழுககத் தொடங்க, அப்போது எங்கும் வெற்றிபெற்றுவந்த அங்கிலேயர்க்கு அந்த ராஜ்யம் சீக்கிரத்தில் இணங்கிப்போமபடியாயிருந்தது. இப்படி சின்னபின்னமாய்க் கிடந்த அற்பமான சிறறரசுநாடுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து ரணஜிதசிங்கு ஒரு பெரிய ராஜ்யமாக்கினான். கபிலதேசத்தைச்சேர்ந்த நீர்வளம நிலவளமுள்ள மாகாணங்களையெல்லாம் தன் வசப்படுத

திக்கொண்டான். தன்னுடைய நாட்டில் அங்கிலேயர் வந்து புகா தபடி அதற்குவேண்டிய முன்ஜாக்கிரதை செய்துகொண்டான். குதிரைவீரர்களாயினும் யுத்தசாஸ்திரப் பயிற்சியில்லாத அத்தேச த்து வீரர்களை நன்றாய்ப் பழக்கிப் போர்புரிய வல்ல பெரும்படை யாகச் செய்துகொண்டான். சத்துருக்களையெல்லாம வென்று தங்கள் நாட்டைப் பாவச்செய்யவேண்டுமென்கிற அத்தேசத்துக குடிகளு டைய கோரிக்கைக்கு இணங்கியே நடந்து அனைத்தனம் செய்து வந்ததனால், அவன் தான் நினைத்தபடியெல்லாம காரியசித்தி பெறும படியாயிற்று. ஆயினும் அவனுடைய நாட்டுக்கு இவ்வளவுதா னென்று ஒருவரையறை ஏற்பட்டு இந்த எல்லையைத் தாண்டி அவர் கள் வரக்கூடாதென்று உடன்படிக்கை உண்டானகாலத்தில அத் தேசத்து ஜனங்களுடைய மனப்போககுக்கு ஏற்றகாரியம் செயவ தற்கு வேண்டிய உபாயம் தேடிக்கொடுக்கத்தக்க வேறொரு ரண ஜித்சிங்கு இல்லாமற்போகவே உள்நாட்டுக் கலகங்கள் அதிகரித்து வரவா அந்த ராஜயம் க்ஷீணிக்கும்படியாயிற்று.

ரணஜித்சிங்கு ஆட்சிசெய்து வந்தகாலத்தில் அவனுடைய ராஜ் யத்து வரும்படி 2½ கோடி ரூபாய் என்றும், ஏறக்குறைய 82,000 படைகளும் 400 பீரங்கிகளும் அவன் சுவாதீனததில் இருந்தனவென்றும் சொல்லுகிறார்கள். இந்த ரணஜித்சிங்கு பல தடவைகளில் இத்தேசத்து கவர்னர் ஜனரல் அவர்களை வரவழைத்து வெகு மேன்மையாக தர்ப்பார் செய்வித்தான். கடைசியாய்ப் பலதேசத்து ராஜாக்களையும் பிரபுக்களையும் வரவழைத்துத் தன் பேரப்பிள்ளைக்கு வெகு வைபவமாகக் கலியாணம் செய்வித்தான். இப்படி மிகுந்த யுக்திபுத்தி சாமர்த்தியமும் பராக்கிரமமுமுள்ள பூர்வகாலத்தரசனான ரணஜித்சிங்கு இறந்தபோது அவனை அடக் கம்செய்தவிடததில் விசிததிரமான கோரியொன்று கட்டிவைத்தி ருக்கிறார்கள். அதன் உருவத்தையே இச்சஞ்சிகைப் படத்தில் காட்டியிருக்கிறோம்.

காற்றுக்கும் மழைக்கும் நடந்த ஒரு சம்பாஷணை.

கோடைகழிந்து மழைக்காலம்வந்து காற்றும் மழையும ஒன்று கலந்து அடிக்க ஆரம்பித்தபோது ஒருநாள் அவைகளுக்குத் தங்க ளுடைய பலாபலத்தைப்பற்றி அடியில்வருமாறு ஒரு சம்பாஷணை யுண்டாயிற்று.

காற்று: அடா அற்பமழையே, நீ எனக்கெவ்வளவு? நான் உன் னைப்பார்க்கிலும் இரட்டிபபு அதிகமான பலமுள்ளவன்; என்னு டைய விசையையும் வேகத்தையும பார்! நான் என் பலத்தையெல் லாம்கொண்டு மோதத்தொடங்கினால் இப்பூமியைத தலைகீழாகச்

செய்துவிடுவேன்; அண்டபிண்ட சராசரங்களும் உருக்குலைந்து போய்விடும்.

மழை: நீ என்னவோ வீண்பெருமை பேசுகிறாய். சோதனை பண்ணிப்பார்த்தால் வலிமையில் நான உனக்குக் குறைந்தவனல்லவென்பது உனக்கே தெளிவாய் விளங்கும்.

காற்று: சோதனைபண்ணியா பார்க்கவேண்டும்? அதற்கென்ன, இதோ ஒரு நொடி. நான் ஒருநிமிஷத்தில் பெரிய மரங்களையெல்லாம் முறித்துத் தள்ளுவேன்; கோவிலகளிலுள்ள கோபுரங்களையும் இடித்து ஆகாயத்தில் பறந்தோடச் செய்வேன்; பாய்மரங்களைப் பொடியாக்கிவிடுவேன்; பெரிய மரக்கலங்களை மண்ணுக்கிவிடுவேன்; இப்படியே இன்னும் அநேகம் காரியங்கள் செய்வேன். என்னை ஒரு மணல்வெளியான பெருங்காட்டிலேமாத்திரம் கொண்டுவிட்டுப பாருங்கள். நான் இவ்வளவு பலசாலியென்பதை நீங்கள் உடனே அறிந்துகொள்வீர்கள்.

மழை: இப்படியெல்லாம் வீணே பெருமையடித்துக்கொள்வதில் பயனென்ன? வல்லமையுண்டானால் காரியத்திலல்லவோ காட்டவேண்டும். எதோ உன் வலிமையைக் காட்டு; நீ சொல்வதில் பத்திலொருபங்காவது மெய்யா பார்ப்போம் என்றது. அதைக்கேட்டவுடனே காற்று கோவென்று இரைந்துகொண்டு, வற்றியுலர்ந்த பாதைகளிலுள்ள தூளிகளையெல்லாம் உயரக்கிளப்பி எங்கும் மண்மாரி பொழியச்செய்து, எவர்க்கும் வழி நடக்கக் கண் தெரியவொட்டாமற்செய்தது. வெளியில் இருப்பவர்களெல்லாரும் ஒன்றும் தெரியாமல் வஸ்திரத்தினால் முகத்தை மூடிக்கொண்டு அங்கங்கே அப்படியே நின்றுபோனார்கள்; இலைகளெல்லாம் சிறு பறவைகள்போல ஆகாயத்தில் பறந்துபோகலாயின; மரங்களெல்லாம் முறிந்துவிழுந்தன; கட்டடங்கள் அநேகமாய் இடிந்துபோயின; மரக்கலங்களெல்லாம் நிமிஷங்கூட நின்றவிடத்தில் நில்லாமல் இங்குமங்கும் தத்தளித்து அறைபட்டு உடைந்துபோயின. அப்போது காற்று மழையைப் பார்த்து, இவ்வளவுகாரியங்கள் செய்ய உன்னாலாகுமென்று நீ சொல்லத்துணிவாயா, என்று கேட்டது.

மழை: இப்படிப்பட்ட காரியங்கள் செய்வேனென்று நான் ஒருபோதும் சொல்லவரவில்லை. என்னுடைய வலிமை இவ்விதமானதன்று; வேறுவிதமானது. அந்த வழியில் நானும் இவ்வளவு காரியம் செய்வேனென்பதற்குத் தடையில்லை. நீ எவ்வளவு பலமுள்ளவனானாலும் ஜனங்கள் உன்னை அவ்வளவாய் லக்ஷியம்செய்வதில்லை. நீ இவ்வளவு வேகமாக வீசிக்கொண்டிருந்தும், ஒரு விசேஷமும் இல்லாதகாலத்தில் எப்படியோ அப்படியே யாவரும் வெளியே போய்க்கொண்டிருக்கிறார்கள். நான் என் பலத்தைக் காட்ட ஆரம்பித்தாலோ என் தலையைக் காண்பதற்குமுன்னமே

எல்லோரும் உள்ளே போய் ஒளித்துக்கொண்டு நான் முற்றும் மறைந்துபோமளவும் வெளியே தலைகாட்டாமல் அங்கேயே பத்திரமாய்ப் பதுங்கிக்கொண்டிருப்பார்கள்.

காற்று: அப்படியா! அப்படிப்பட்ட வலிமையை எனக்குச் சற்றே காட்டு பார்ப்போம்; பிறகு நம்மிருவருடைய வலிமையையும் ஒத்துப்பார்த்து இன்னான் அதிக பலசாலியென்பதைத் தீர்மானித்துக்கொள்ளலாம் என்று சொல்லிற்று.

அதைக் கேட்டவுடனே மழையானது பெய்ய ஆரம்பித்து முதலில் சிறு துளிகளாக விழுந்தது. அப்பொழுது எவரும் அதை ஒருபொருட்டாக மதியாமல் தாம் போகவேண்டிய இடங்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். வரவர மழை பலக்க ஆரம்பித்து எவரும் கண்ணெடுத்துப் பார்க்ககூடாதபடிச் சமாரியாக பொழியலாயிற்று. அதைக் கண்டவுடனே வழிப்போக்காகளெல்லாரும் தங்கள் குடைகளை மலர்த்திப் பிடித்துக்கொள்ளலானார்கள். வேலைக்காரர்களெல்லாம் சம்பங்குடைகளையும் மெழுக்குச்சீலைகளையும் தலையில் போட்டுக்கொண்டு தங்கள்தங்கள் வேலைகளுக்குத் தப்பாமல் போகலானார்கள். வண்டிக்காரர்களெல்லாம் மெழுக்குச்சீலைகளால் வண்டியை நன்றாக மூடிவிட்டுத் தடையில்லாமல் தாம் போகவேண்டியவிடத்திற்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போனார்கள். இப்படியே ஒவ்வொருவரும் ஏதோ ஒரு உபாயத்தால் தம்மேல் மழைத்துளி விழாதபடி அந்தப் பெருமழையிலும் பயமில்லாமல் வெளியே போய்வந்தார்கள்.

அப்போது காற்றானது மழையைப்பார்த்து, இவ்வளவுதானே உன் பெருமை! எனக்கு இது ஒரு அதிசயமாய்த் தோன்றவில்லை. ஏனெனில் எல்லாமனிதர்களும் ஏதோ ஒன்றைத் தலைமேல் போட்டு மூடிக்கொண்டு சுலபமாய் உன்னை ஒதுக்கிவிட்டுச் சுகமாக வெளியே போகிறார்கள். நீ இவ்வளவு வலிமையாக வேலை செய்துகொண்டிருந்தும் அதோ அந்தச் சிறு பையன்கூட உன்னைச் சிறிதும் மதியாமல் குடைபிடித்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு நடந்துபோகிறான் பார்த்தாயா? அவனிடத்தில் நான் என் வலிமைச் சிறிதளவு காட்டுகிறேன், அவன் எப்பாடுபடுகிறான் பார்க்கிறாயா? அப்பொழுதாவது நான் மிகுந்த வலியுள்ளவனென்பது உனக்குத் தெரியட்டுமே என்று சொல்லிக் காற்று அதிக விசையாய் அடிக்க ஆரம்பித்தது. முதலில் அந்தப் பையன் சிறிது நேரம், காற்று குடையைக் கீழே மடக்கித்தள்ள, இவன் மறுபடி தன் இரண்டு கைகளாலும் உறுதியாய் அதைத் தூக்கிப்பிடிக்க, அது மறுபடியும் தள்ள, இவன் மறுபடியும் தூக்க, இவ்வண்ணமாய் அந்தப் பெருங்காற்றோடு போராடிக்கொண்டு சிறிதுதூரம் போயினான். இப்படியிருக்கத் திடீரென்று ஒரு பெருங்காற்று வந்து அப்படியே அவன் குடையை ஆகாயத்தில் தூக்கிக்கொ

ண்டு போய்விட்டது. அவன் மழையிலே நனைந்துகொண்டு சொட்டச் சொட்ட நடுத்தெருவிலே நிற்கலானான்.

காற்று: ஓ மழைராஜனே; இப்பொழுது உனக்கு எப்படியிருக்கிறது?

மழை: நான் எவ்வளவுதான் என் வலிமையைக் காட்டட்டும்; நீ தோற்றுப்போனதாய் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டாய். உன் பிடிவாதம் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆதலின் அதைப் பற்றித் திரும்பவும் சோதிக்க எனக்கிஷ்டமில்லை. அது எப்படியாவது ஆகட்டும்; உன்னைவிட நான் பதின்மடங்கு அதிகமாய உலகத்திற்குப் பயன்படத்தக்கவன் என்பதுமாத்திரம் நிச்சயம். நான் ஒருவன் இல்லாமற்போனால் நாட்டுஜனங்கள் நன்னீருக்கு என்னசெய்வார்கள்? எப்போ மழைபெய்து ஏரி நிறையப்போகிறது என்று அவர்கள் என்னையே எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். நான் இல்லாவிட்டால் உலகத்தில் குளமேது குட்டையேது, மரமேது செடியேது, பயிரேது பச்சையேது?

> "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
> துண்ணின் றுடற்றும் பசி."
> "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉ மழை."

என்று இப்படி என் பெருமைகளைப் பெரியோர்கள் பலவாறு புகழ்ந்து பேசுகின்றனரல்லவா?

காற்று: ஆம், உன்னால் உலகத்துக்கு மிகவும் உபயோகந்தான்! வழி துறைகளெல்லாம் சேறுந்தண்ணீருமாக்கி யாராவது தப்பித் தவறி அவ்வழியே வந்தால் அவர்கள் சறுக்கி விழுந்து மண்டையுடையும்படி செய்பவனல்லவா? உன் பெருமையை நீதானப்பா புகழ்ந்துகொள்ளவேண்டும். நீ எவ்வளவு உக்கிரமாக வர்ஷித்திருந்தாலும், நான் அல்லவோ உன் தீமைகளையெல்லாம் ஒரு நாழிகையில் வறட்டிப் பாதைகளைச் செம்மையாக்கி எவர்க்கும் அநுகூலஞ்செய்கிறேன்.

மழை: ஆம், உலகத்தில் எல்லாம் உன் பெருமைதான். பாதைகளை உலர்த்துவது நீதானோ? சூரியன் உனக்குப் பெரிய உதவியாயிருக்கிறான்; பாதை உலர்ந்துபோகின்றது. அவன் எப்பொழுதாவது எனக்குத் துணையாவதுண்டா?

காற்று: அது கிடக்கட்டும், நானே சூரியனைப்போல ஆகிவிடவேண்டுமென்று ஆவல்கொண்டிருக்கிறேன். சூரியன் புறப்பட்டால் யாவரும் களிப்படைகின்றனர். நம்மைக்கண்டால் முகஞ்சுளிக்கிறார்களல்லவா? ஆயினும், நம் இருவர்மட்டில் யோசித்துப் பார்த்தால், என்னையே ஜனங்கள் அதிகமாய்க் கொண்டாடுகின்றனர்.

மழை: அப்படி ஒருபோதுமில்லை. உன்னைவிட என்னையே மேலாகக் கொண்டாடுகின்றனரென நான் உறுதியாய்ச் சொல்லு

வேன். எப்படியென்கிறுயோ? இரண்டொருநாளைக்கு முன்புதான் உலகத்திலுள்ள வேதியர்களெல்லாரும் தங்கள் பயிர்கள் விருத்தி யடையவேண்டுமென்று என்னைப் பிரார்த்தித்து வருணஜெபம் செய்யலானூர்கள். அவர்கள் செய்த தவம் ஈடேறி இப்போ மிருதியாய் மழை பொழிந்தபிறகு அவர்கள் என்னைக் கொண்டா டுவதைப் பார்த்தாயா? நாம் சண்டைபோட்டது போதும்; நம்மு டைய எஜமானனுன சூரியபகவான் இதோ வந்துவிட்டார். ஒதுங் கிப்போய்விடுவோம வா என்றது.

உடனே மேகங்களெல்லாம் விலகிப்போக அவற்றினிடையே பளபளவென்று சூரியன் காணப்பட்டான். சூரியன் வெளிப் பட்டதைக் கண்டு எல்லோரும், எப்போ வெயிலைக் காணப்போகி ருேமென்றிருந்தது; இன்றுதான் சுதினம. இரண்டுநாள் வெயிலில் லாமல் வீடுவாயிலெல்லாம் நாற்றமெடுத்துப்போயினவென்று சொல்லி ஆநந்தமடைந்தாகள். சிறுபிள்ளைகளெல்லாம் சந்தோ ஷமாய்ச் சிரித்துக்கொண்டு விளையாட வெளியே ஓடிவந்தார்கள். இத்தனைநாள் வீட்டுக்குள் அடைததுக்கொண்டிருந்தவர்களெல் லாரும் வெயில்காய 'வெளியேவந்து தெருவில் கூட்டங்கூட்ட மாய் நின்ருர்கள். இப்படிச் சூரியன் பிரகாசித்தது பலபே ருக்கு மிகவும் உல்லாஸகரமாயிருந்தாலும், சிலர் அதன் கொடு மையைத் தாளமாட்டாமல, சிலநாழிகைக்குமுன்னே மழையும் காற்றும் பொறுக்கக்கூடவில்லையென்று அவற்றை நிந்தித்து எப்போ வெயில் புறப்படப்போகிறதென்று சூரியனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனுபோய், இந்தப் பாழும் வெயில் கொளுத்துகிறதே; எப்பொழுது குளிர்ந்தகாற்று வீசப்போகிறதென்று காற்றை வேண் டலானுாகள்.

அப்போது சூரியன் காற்றுமழைகளை நோக்கி, இதோ பார்த் தீர்களா உங்களுடைய கலகத்தால் எவ்வளவு தீங்கு விளைந்தி ருக்கின்றது! நான் உலகத்துக்கெல்லாம மிக்க உபயோகமானவ னென நீங்கள் என்னைப்பற்றி மிகப் பெருமையாகப் பேசினீர் களே! அப்படிப்பட்ட என்னைக்கூட உங்களுடைய உதவியின்றித் தனியே நின்றபோது நன்றியறிதலில்லாத சிலர் நிந்தித்துப் பேசு கிருர்களல்லவா? ஆதலால் நீங்கள் இனி எப்போதும் என்னை இவ்வாறு தனியேவிட்டு ஒதுங்கிப்போய்விடாதேயுங்கள்; நீங்க ளும் ஒருவர்க்கொருவர் கலகப்படாதேயுங்கள். நாம் எல்லோ ரும் அவரவர்போகிறவழியில் உலகத்துக்கு ஓரேமாதிரியாக உதவி செய்யவேண்டுமென்றே கடவுள் நம்மைப் படைத்திருக்கிருர். ஆதலின் நம்மைப் படைத்த பரமபுருஷனுடைய சங்கற்பத்தை வீண்போக்காதபடி நாம் ஒருவர்க்கொருவர் கலகப்படாமல் எல் லோரும் ஒன்றுகூடி அவரவர் செய்யவேண்டிய காரியத்தைச் சரியாகச் செய்துவரக்கடவோம் என்ருன்.

தூக்குத் தூக்கி

(ஒரு பழையகதை)

முன்னொருகாலத்தில் வடநாட்டிலே புஷ்பபுரமென்ற ஓர் ஊரில் தனசிங்கு என்றொரு சேவகன் இருந்தான. அவனுக்கு மாசம் ஒன்றுக்கு 7 ரூபா சம்பளம். இந்தத் தொகையில் 5 ரூபா சாப்பாட்டுக்காகச் செலவு செய்து மீதி 2 ரூபா மாசந்தோறும் சேர்த்துவந்தான். ஐந்துவருஷம் ஆன பின்பு ஒருநாள் கையிருப்பை எண்ணிப்பார்க்கும்பொழுது, 120 ரூபாதான் இருந்தது. திரும்பித்திரும்பி நூறுதடவை எண்ணினபோதிலும் 120 ரூபாவுக்குமேல் எப்படி இருக்கக்கூடும்? ஆயினும் தனசிங்கு பின்வருமாறு யோசிக்கலானான்:—

"ஐயோ! ஐந்துவருஷகாலமாய நெற்றித்தண்ணீர் நிலத்தில்விழ உழைத்தும் மிகுந்தது 120 ரூபாவுக்குமேல் ஒரு சின்னக்காசு கூடக் காணோமே. நல்லது இந்த ஸ்வல்பத்தொகையைக்கொண்டு என்னதான் செய்யலாம். குடியிருக்க நல்ல வீடுதான் ஒன்று வாங்கலாமா? கூடாது. இந்தப் பணம் என் கலியாணத்துக்குப் போதுமா? போதாதே. இன்னம் ஐந்துவருஷம் உழைத்தாலல்லவோ இன்னும் இவ்வளவாவது சொத்து வீடுவாங்கலாம். சாதாரணமாய்க் கலியாணத்துக்கு 500, 600 பிடிக்கிறதே. அவ்வளவு தொகைக்கு நான் எங்குபோகிறது. இருபது முப்பதுவருஷம் உழைத்தாலல்லவோ அவ்வளவு கிடைக்கும். ஆகையால் என் கையிலிருக்கிற சொற்பத்தொகையால் ஒன்றும் முடியாது. இந்தப் பாழும் ஊழியத்தொழிலாகிய சேவகவிருத்தியால் முன்னுக்கு வருவது கஷ்டம். நம்முடைய ஊரில் இப்பொழுது நவகோடி நாராயணசெட்டி என்று சொல்லும் சின்னய்யசெட்டியார் பத்துவருஷத்துக்கு முந்தித் தவிட்டுச் செட்டியாய்த் தொழில் ஆரம்பித்தாராம். கையில் அவர் வியாபாரத்தில் இறங்கும்பொழுது முதல் 10 ரூபாதான் இருந்ததாம். இப்பொழுது அவருக்கு அளவற்ற திரவியமுண்டாயிருப்பதை நாம் பார்க்கிறோமே. அவருடைய சொந்தக் கப்பல்கள் எத்தனையோ வியாபாரநிமித்தம் கடல்களில் ஓடுகின்றனவே. அவருக்குத் தொடக்கத்திலிருந்த முதலைவிட நமக்கு 12 மடங்கு முதலிருக்கிறதே. நமக்கும் ஏன் ஈசுவரன் சகாயம் செய்யக்கூடாது."

என்று இவ்வாறு ஆலோசித்து அன்றையதினமே சேவகத்தொழிலை விட்டு விட்டுத் தனக்கும் ஈசன் சகாயம்செய்வாரென்று எண்ணித் தனக்கு நல்ல வழிகாட்டிய சின்னய்யசெட்டிபோலத் தானும் தவிடுவாங்கி வியாபாரம்செய்ய ஆரம்பித்தான். அவன் நல்ல புத்திமானாகையாலும் அவனுக்கு அப்பொழுது சுக்கிரதசையானபடியாலும், வியாபாரம்செய்ய ஆரம்பித்த ஒரு வருஷத்துக்குள் போட்டமுதல் இரண்டத்தனை அதாவது 250 ரூபா ஆய்விட்டது. உடனே அந்தவருஷம் தவிட்டுவியாபாரத்தை மாற்றிப் பிளவுக் கடை வைத்தான். (பிளவுக்கடையாவது எழை ஜனங்களுக்குச் சில்லறையில் புகையிலை வெற்றிலை பாக்குமுதலியவை விற்கும் கடையாம்.) இதில் வெகுலாபம் கிடைப்பது வழக்கம். அந்தப்படியே தனசிங்குக்கும் இரண்டாம்வருஷத்தில் 500 ரூபா கிடைத்தது. உடனே பிளவுக்கடையை விட்டு மிட்டாய்க்கடை வைக்க ஆரம்பித்தான் சிங்குஜாதியார்கள் விதம் விதமான

ருசியுள்ள பணியாரம்செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர்கள். மேலும் பணியாரக்கடை வியாபாரம் பொறுப்பானது. எல்லாப பெரியமனிதருடைய சிநேகமுண்டாவதுடன், கடனாய் விற்பதைக் கட்டாயமாய நிறுததினால் ஆரம்பித்த தொகைககு 5, 6 மடஙகு லாபம் சுலபமாய்த் தேறும். இதை உத்தேசித்துத்தான் தனசிங்கு பணியாரக்கடையை ஏற்படுத்தினது. அவன் நினைத்தபடியே வியாபாரம் செய்யத தொடங்கினதுமுதல் மூன்றுவதுவருஷம் முடியுமுன் அவன் கையில் 3,000 ரூபா முதல் ஏறிவிட்டது. சின்னய்யசெட்டியைப்போலத் தன்னையும் ஈசுரன் அநுக்கிரஹித்திருப்பதாக எண்ணி அவன் மனமகிழ்ந்தான். இநதமாதிரியே ஒவ்வொருவருஷமும் வெவ்வேறு கௌரவமான வியாபாரங்கள்செய்து லாபம் அடைநதுகொண்டே பத்துவருஷகாலத்தில் பெரிய நவகோடி நாராயணசெட்டி என்னும்படி தனசிங்கும் ஆய்விட்டான். அப்புறம் முதல்தரமான நல்முததுக்களையும் ரவைகளையும்விட வேறு சரக்குகளைக கையால் தொட்டுககூடப பார்க்கிறதில்லை. எபபொழுதும் அதிக ஜாக்கிரதை உள்ளவனாயும், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவனாயும், ஈசுவரனுக்குப் பயந்து நடக்கிறவனாயும இருந்தான். பொய் சூது வாது இவை இன்னவென்று அவனுக்குத் தெரியவே தெரியா. இவைகளில் பிரவர்த்தித்தால் ஈசன் இவ்வாறு அனுகூலப்படுத்துவாரா? மேலும ஒரு பெரிய பணக்காரனாய்ப போனபோதிலும் முன் தானிருந்த தரித்திர ஸ்திதியை அவன் மறக்கவேயில்லை.

பத்துவருஷத்துக்கு முந்தி அவன் இருந்த ஸ்திதி என்ன! இப்பொழுது அவனுக்குக் கிடைத்திருககும் பதவி என்ன! அப்பொழுது 7 ரூபா சம்பளமுள்ள சேவகன். இப்பொழுதோ மாதம் 7 ரூபா பெற்றுக்கொண்டு சேவகர்கள் அநேகர் அவன்கீழ் இருக்கிறார்கள். இப்பொழுது அவனுடைய வருமானமோ அரசனுடைய வருமானத்துக்கு ஒப்பானது. இதை எல்லாம் யோசித்து அவன், இனி நாம் இவ்வுலகத்திலுள்ள ஸௌக்கியங்களைச் செம்மையாய் அனுபவிககாமலிருபபானேன் என்று எண்ணி, உடனே 60,000 ரூபாவுக்கு ஒரு பெரிய தேவேந்திரசபை என்று சொல்லப்பட்ட சிறந்த மாளிகை ஒன்று புஷ்பபுரத்தில் வாங்கினான். கைலாஸம என்றால் அதற்கே தகும என்று ஜனங்கள் சொல்லும்படியாய் அந்த மாளிகையைச் சிங்காரித்து வேண்டிய ஏவலாளர் முதலான எல்லாரையும் நியமித்துககொண்டதுமன்றி, அதிக ஸௌந்தரியமுள்ளவளான கமலாபாயி என்னும் ஒரு தனிகன்வீட்டுப் பெண்ணையும் மணம்புரிந்தான். அந்தப் பெண்ணின் ஜாதகமும் நல்லதாயிருந்தது. நிமிஷந்தோறும் அவனுடைய வியாபாரம் விர்த்தியாய்க்கொண்டே வந்தது. கலியாணம் செய்துகொண்ட இரண்டு வருஷத்துக்கெல்லாம் அவனுக்குப் புத்திரோற்பத்தியாயிற்று. இந்த முதற் பிள்ளை ராமசந்திரனைப்போல அதிக அழகாயிருந்தபடியால் இவனுக்கு ராமசிங்கு என்று பேரிடப்பட்டது. இவன் நாளொருமேனியும பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவந்தான். அபபால் மூன்றுவருஷத்துககெல்லாம் இரண்டாவது குமாரன் பிறந்தான. தனசிங்கு இந்தக் குழந்தைக்கு லக்ஷ்மணசிங்கு என்று பெயரிட்டான. மற்றொரு இரண்டுவருஷததில் தனசிங்குக்கு மூன்றாவது குமாரன் ஜனித்தான். இந்தக் குழந்தை எல்லாரையும்விட அதிக ஸௌந்தரியமுள்ளவனாயிருந்தபடியாலும சேஷ்டைகள் அதிகமாயிருந்தபடியாலும் இவனுக்கு கிருஷ்ணசிங்கு என்று பெற்றோர்கள் பெயரிட்டார்கள். இந்தமாதிரி கலியாணமான ஏழுவருஷத்துக்குள் தனசிங்கு கிளிகள்போன்ற அழகுள்ள மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனா

ராஜன் மூத்தகுழந்தைக்கு ஐந்துவயது ஆயிற்று. தனஸிங்கு பெற்ற பாக்கியமே பாக்கியம்!

பெரிய பணக்காரனானதையாலும் லௌகிகதர்மத்தை நன்றாய் அறிந்திருந்தபடியாலும் அவன் தன் குழந்தைகளை முன்னுக்குக் கொண்டுவரப் போதுமானவரையில் சிரமப்பட்டான். "மூத்தது மூத்தண்ணா" என்னும் பழமொழிப்படியே ராமசிங்கு பெருமூடனாய் இருந்தான். உபாத்தியாயர்கள் என்னவிதமாய்ப் போதித்தபோதிலும் அது அவன் மனதில் பதிகிறதில்லை. ஒவ்வொருபாஷைக்கு ஒவ்வொரு உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார்கள். மௌல்விகள் பண்டிதர்கள் அய்யர்கள் முதலான எல்லோரும் முறையே வந்து குழந்தைகளுக்குப் பாடஞ்சொல்ல ஆரம்பித்தார்கள், என்றாலும் ராமசிங்குக்குமாத்திரம் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. நாளுக்குநாள் ஒரு பெரிய அண்ணாத்தையாயும் டம்பாசாரியாயும் ஆனானேயல்லாமல் 'ஹரி' என்ற அக்ஷரங்கூட அவன் வாயில் நுழையவில்லை. விலையுயர்ந்த உடுப்புகள் தரித்துக்கொள்வதும், வயிறுவெடிக்க நன்றாய்த் தின்பதும், மடத்துக்காளைபோல செழித்துக் தறுதலையாய்த் திரியும் போக்கற்ற பிள்ளைகளுடன் கூடி ஊர்சுற்றுவதும் ராமஸிங்குக்குப் பெரிய வேலையாயிருந்தது. அவன் தம்பி லக்ஷ்மணஸிங்கு அவனைவிடக் கொஞ்சம் புத்திசாலியாயிருந்தான். அதிமேதாவியாகாவிட்டாலும் ஸ்வாமி கொடுத்திருக்கும் சொற்ப புத்தியை நல்லவிஷயமாய் உபயோகித்து இரவும்பகலுமாய் உழைத்து அவன் ஒருவாறு தேறினான். கடைசிப்பிள்ளை கிருஷ்ணஸிங்கோ அதிக புத்திகூர்மையுள்ளவனாகக் காணப்பட்டான். ஒருதடவை சொல்லிக்கொடுப்பதற்குமுன் எந்தப் பாடத்தையும் கருத்தாய்ப் படித்துக்கொள்வான். குசாக்ரபுத்தி என்றால் அவனுக்கே தகும். அவன் உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் அவனுடைய அறிவைக் கண்டு மகிழ்ந்தார்கள். கடைசிப் பிள்ளையாகையால் அவனிடத்தில் எல்லோரும் அதிக பிரீதியும் வைத்தார்கள். இந்தமாதிரி மூன்று பிள்ளைகளும் படித்துக்கொண்டுவரச் சில வருஷங்கள் கழிந்தன. ராமசிங்குக்கு வயது பதினெட்டும், லக்ஷ்மணசிங்குக்கு வயது பதினைந்தும், கிருஷ்ணசிங்குக்கு வயது பதின்மூன்றும் ஆயின. இதற்குள்ளே சகலவித்தைகளையும் கிருஷ்ணசிங்கு கற்றுக்கொண்டதாய்ச் சொல்லலாம். இப்படியிருக்கையில் பின்சொல்லப்போகிற மனக்கலக்கம் அந்தக் குடும்பத்தில் நேரிட்டது.

தனஸிங்கு என்பவனுக்குக் கிழத்தனம் வரச் சிறிது ஆரம்பித்துவிட்டது. கலியாணமாய் இருபதுவருஷமாகி, பிள்ளைகள் எல்லாம் தலையெடுக்குங்காலமாயிற்று. இப்படியிருக்க ஒருநாள் தனஸிங்கு தான் முப்பது வருஷத்துக்கு முன்னிருந்த தரித்திர ஸ்திதியையும் இப்பொழுது தனக்கிருக்கும் பாக்கியத்தையும் யோசித்து மனம் பூரித்ததனால் ஒன்றும் தெரியாமல் தனது மனையாளைக் கூப்பிட்டு: "அடியே கமலாபாய், நம் குழந்தைகள் வெளியிலிருந்து வந்தவுடன் தலைக்கு 100 ரூபா கொடுத்து இன்று நான் பக்ஷணம்வாங்கிச் சாப்பிடச்சொன்னதாகச் சொல்" என்றான். ஆக்கினைப்படியே கமலாபாய் ராமசிங்கு வந்தவுடன் அவனுக்கு வயிறுநிரம்பப் பழையதுபோட்டு 100 ரூபா தகப்பனார் கொடுக்கச்சொன்னதாகக் கொடுத்தாள். எதுக்கென்றுகூடக் கேட்காமல் வாங்கிக்கொண்டுபோய் அவன் அதைத் தானவைத்துக்கொண்டிருந்த ஒரு தாஸியிடம் கொடுத்துவிட்டான். அவன் புத்தி அவ்வளவுதான். ராமசிங்கு திரும்பினதும் திரும்பாததும் லக்ஷ்மணசிங்கு உபாத்தியாயர் வீட்டிலிருந்து வந்தான். கமலாபாய் அவனுக்கும்

பழையது அளித்து 100 ரூபா தகப்பனுர் கொடுக்கச்சொன்னதாகச் சொல்லிக் கொடுத்தாள். அதை அவன் ஸந்தோஷமாய் வாங்கிக்கொண்டு "அம்மா இது எதற்காக" என்று கேட்க, தாயார் பணியாரச்செலவுககு என்றுள். ஆனல் சரி என்று அதை எடுத்துக்கொண்டுபோய்ப் புஸ்தகங்கள் உடுப்புகள் முதலானவை வாங்கிக்கொண்டான். இவன் மூத்தவனைவிடப் புத்திசாலிதான்.

பிறகு எல்லாரையும்விட அதிபுத்திமானுன கிருஷ்ணசிங்கு வீட்டுக்கு வந்து பழையதுபோடத் தாயாரைக் கேட்டான். தாயார் அவனுக்கு அமுது அளித்து 100 ரூபா கொண்டுவந்து கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொள்ளாமலே "என்னத்துக்காக ஒரு நாளுமில்லாமல் இன்று சாப்பிடும்பொழுது 100 ரூபா கொண்டுவந்து வைக்கிருய்" என்று கேட்க, அதற்கு அவன் தாயார், தகப்பனுர் உத்தரவு என்றும், அந்தப்படியே அண்ணன்மார்கள் பக்ஷணத்துககாக ஆளுக்கு 100 ரூபா வாங்கிப்போயினுர்களென்றும், அந்தமாதிரியே அவனும் வாங்கிபபோய்ப் பணியாரம்வாங்கிச் சாப்பிடுவது தகப்பனுர் அபிப்பிராயம் என்றும் தெரிவித்தாள். இதைக் கேட்டுக் கிருஷ்ணசிங்கு வியப்படைந்து சொன்னதாவது: "ஆ ஆ, ஆச்சரியம்! தகப்பனுர்தான் நன்ருய்க் கொடுத்தார், நீயும் நன்ருய் வாங்கிவந்தாய்! உங்களிருவர்களுடைய புத்தியே புத்தி, வயிரு வண்ணுன் தாழியா? 100 ரூபா பக்ஷணம் எப்படி ஒரு மனிதன் ஒருநாளில் சாப்பிடுவான். நல்லது இப்படி பிரதிதினம் 300 ரூபா பையன்களுக்குக் கொடுக்க ஆரம்பித்தால் எத்தனைநாள்தான் ஆஸ்தி இருக்கும். இரண்டொரு ரூபாவுக்கு ஒரு மனுஷன் பக்ஷணம்வாங்கிச் சாப்பிடுவதே அதிகமல்லவா? இதெல்லாம் தெரியாமல் அவர் ஏதோ மதிமயங்கிக் கொடுத்துவிட்டாலும் நீ குடும்பயோகக்ஷேமத்தில் கருத்துள்ளவள் எப்படி வாங்கிவந்தாய்? எனக்கு இந்தப் பணத்தில் ஒரு காசுகூட வேண்டாம். அண்ணன்மார் இருவரும் தெரியாத்தனத்தால் வாங்கிப்போனதுபோல் நானும் வாங்குவேனே" என்று சொல்லித் தாயாரைக் கண்டித்தான். பணத்தையும் திருப்பிவிட்டான்.

இதையெல்லாம் கேட்டுத் தாயார் மனமகிழ்ந்து, இவனல்லவோ பிள்ளை! மற்றிருவரும் என்னபிள்ளை அணிற்பிள்ளை, தென்னம்பிள்ளைகள்தான் என்று எண்ணிக்கொண்டு, அப்பொழுதுதான் கிருஷ்ணசிங்கு செய்த உபதேசத்தால் அவளுக்கும் புத்தி வந்தபடியால் பணத்தை எடுத்துக்கொணடு புருஷனிடம் சென்று, கடைசிபபிள்ளை சொன்னதையெல்லாம் சொல்லி அவன் பாகத்தைத் திருபபிக்கொடுத்தாள் அவனுடைய புத்திசாலித்தனத்துக்குத் தனசிங்கு அதிக வியப்படைந்து 200 ரூபா கொடுக்கச்சொன்னுன். கிருஷ்ணசிங்கு அதையும் திருப்பிவிடவே தனசிங்கு கோபங்கொண்டவனுய், "எபபொழுதும் அடங்கியிருக்கிற நீ இந்தமாதிரி இன்று ஆரம்பித்த காரணம் என்ன" என்று பிள்ளையைக் கேட்டதற்குப் பையன் "ஐயா நீர் இன்றுமுதல் அஸாத்தியமான காரியங்களைச் செய்யத்தொடங்கினதால் நானும் என் வழககததை மீறலாயிற்று" என்ருன். கிழத்தனம் மேலிடவே தனசிங்குக்கு முன்னிருந்த அமரிகை போய்விட்டது. தனமதத்தால் தான் என்னும் அகங்காரம் உண்டாயிருந்தது. தனக்கு ஸாத்தியப்படாத காரியம் ஒன்றுமில்லை என்று அவன் எண்ணினபடியால் தன் கடைசிக்குமாரன் சொன்ன ஹிதோபதேசங்கள் எல்லாம் அவன் கோபாக கினிக்கு நெய்ஆவுதிபோல் ஆயின. கண் கடைதெரியாமல் கோபம்வந்து தனசிங்கை மூடிக்கொள்ளவே அவன் "அடாபையலே இந்த உலகத்தில்

எனக்கு அஸாத்தியமான காரியம் என்ன இருக்கிறது சொல்'' என்றான். கிருஷ்ணசிங்கு என்ன புத்திமானாயிருந்தும் சிறுபிள்ளையாகையால் தகப்பனார் அடைந்திருக்கும் கோபத்தைப் பார்த்து விட்டுவிடாமல், இதுதான் நல்லசமயம், இவர் மூட்டாள்தனத்தை நாம் நன்றாய்க் களையவேணும் என்று நினைத்து ''ஐயா என்னைப்பெற்ற பாக்கியவந்தரே, என்பேரில் கோபிக்கவேண்டாம். தங்களுக்கு அஸாத்தியமான காரியங்கள் உண்டென்று உதாஹரிக்கும்பொருட்டு இரண்டொன்று சொல்லுகிறேன். என்பேரில் கெட்ட அபிப்பிராயம் கொள்ளவேண்டாம். எனக்கு இந்த ஊர் ராஜகுமாரத்தியை விவாகம் செய்துவைப்பீர்களா? எனக்கு அந்தப் பெண்மேல் ஆசை என்றும் நான் அரசனுக்கு மருமகனாகவேணுமென்றும் சொன்னதல்ல; தங்களால் செய்ய அஸாத்தியமான காரியத்துக்கு ஒரு உதாரணமாக எடுத்துக்கூறியது; மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று முடித்தான். வயதில் சிறுவனாயிருந்தும் புத்தியில் முதிர்ந்தவனான கிருஷ்ணசிங்கின் உபதேசங்கள் தகப்பனார்காதில் நாராசம்போல் விழுந்தன. ''அடா துஷ்டா, முகத்தில் மீசைமுளைக்குமுன் உனக்கு இவ்வளவு ஆசையா? நாம் இப்பொழுது என்ன நல்ல தசையிலிருந்தாலும் நமது தகப்பனார் முதலில் தவிட்டுவியாபாரம்பண்ணின தனசிங்கு என்பதை மறந்துவிட்டாய்போலும்'' என்று சொல்லிக்கொண்டே, காலில் போட்டிருந்த இரண்டு செருப்புகளையும் கழற்றி உச்சந்தலை மயிர் உதிரக் கை சோருமளவும் அதிக புத்திசாலியாகிய அம்மகனை அடித்தான். கிருஷ்ணசிங்கோ மிகுந்த பொறுமையுடன் அடிகளைச் சிரஸால் முகம்கோணாமல் வஹித்துத் தகப்பன் கை ஓய்ந்துநின்றவுடன் செருப்புகள் இரண்டையும் வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு காற்றாடிபோல் பறந்துபோய்விட்டான். இருட்டுமளவும் தன் சிநேகிதர்கள் அல்லது பந்துக்களுடைய கண்களில் தென்படாமல், புஷ்பபுரத்தில் பதுங்கியிருந்து, இருட்டினபின் ஊருக்குச் சமீபத்திலிருக்கிற காளிகோயிலில் சென்று அங்கொரு பிராகாரச்சுவரிலிருக்கும் ஒரு பெரிய மாடத்தில் செருப்புகள் இரண்டையும் ஒளித்து ஒருவரும் எடுக்காமலிருக்கச் சாந்துபூசி, இனி இந்த ஊரிலிருப்பது நமக்குச் சரியல்லவென்று எண்ணி அன்றிரவே ஓடிப்போனான். தெய்வத்தின் பேரில் பாரத்தைப் போட்டுத் தெய்வம் விட்டவழியாகிறது என்று எண்ணிக்கொண்டு புஷ்பபுரத்தினின்றும் வடக்குநோக்கிப்போகிற வழியே சென்றான். கால் சோருகிறவரையில் நடக்கிறதும், காட்டுக்கனி கிழங்குகளைப் புசிக்கிறதும், ஆற்று அல்லது ஊற்றுத்தண்ணீர்களைக் குடிக்கிறதும், தூக்கம் வந்தபோது வெட்டவெளியிலும் மரத்தின்கீழும் படுத்துறங்குகிறதுமாய் ஒருமாதகாலம் நடந்து காடுமலை வனவனாந்தரங்களை எல்லாம் கடந்து கடைசியாய் ஓர் பெரும் பட்டணம்போய்ச் சேர்ந்தான். அந்த ஊரின் பெயரை விசாரிக்கும்போது அது தாராபுரம் என்றும், அதன் அரசன் ஏகசக்ராதிபதி என்றும், ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் தாராபுரம் மஹா மண்டலேச்வரருக்குக் கப்பம் கட்டப்பட்டவர்கள் என்றும் தெரியவந்தது. அப்படிப்பட்ட தாராபுரத்தில் கிருஷ்ணசிங்கு கடைசியாய்ப் போய்ச்சேர்ந்தான்.

தாராபுரம் மஹா மண்டலேச்வரருக்குப் புத்திரன் என்னும் பாக்கியமில்லை; ஆனால் அவருக்குப் பெண்ரத்தினம் ஒன்றுண்டு. அப்பெண் தெய்வலோகப் பெண்களெல்லாம் வியப்படையத்தக்க அவ்வளவு அதிசய சௌந்தரியமுள்ளவள். மண்டலேச்வரருக்கு நமது பெண்ணைத்தனை ரூப

வதியாவது ரூபவானாவது இதுவரையில உண்டானதுமில்லை, இனி உண்டாகபபோகிறதுமில்லை என்ற கர்வமுண்டு. அந்தப் பெண்ணின் பெயர் சந்திரமுகி. அவளுக்கு அபபொழுது ஒன்பது வயது. அந்த ஊரிலிருக்கும் ராஜகுமாரகலாசாலை என்னும பள்ளிக்கூடத்தில் அவள் படித்துக்கொண்டிருந்தாள். ராஜகுமார கலாசாலை என்பது ராஜகுமாரன் குமாரத்தி மந்திரிகுமாரன் குமாரத்தி முதலான அரண்மனை வாலிபர்களுக்குமாத்திரம் படிக்க அந்த ஊரில் ஏற்படுத்தபபட்டிருநத ஒரு வித்தியாஸ்தானம். அவ்விடததில் ராஜகுமாரததி சந்திரமுகியும் மந்திரி குமாரன் ராமசந்திரனும் பிரதானிகுமாரன் முதலாகிய மற்றுஞ் சிறுவர்களும் படித்துவந்தார்கள். பிரதிதினம் சந்திரமுகி அரண்மனையிலிருந்து கலாசாலைக்குப் போகும்பொழுது அவளுக்குப் பின்னே அவளைக காத்துக்கொண்டு கத்தியும் கையுமாய் நூறு போர்வீரர்கள் போவதும், அவள் படிக்கும் காலமெல்லாம் வாசலில காவலிருநது சாயந்தரம் திரும்பி அரண்மனையில் கொண்டுவந்து விட்டுப்போவதும் வழககம்

கிருஷ்ணசிங்கு தாராபுரத்தில் தெருத்தெருவாய் அல்லாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் ராஜகுமார கலாசாலையிருக்கும் தெருவழியே போனான். வாசலில் நின்றிருநத போர்வீரர்களில் ஒருவன் இவனுடைய இளவயதையும் சௌந்தரியத்தையும் பார்த்து வியப்புற்று இவனுடைய பரதேசிக்கோலத்தைக கண்டு மனமிரங்கி "அடா பையா இங்குவா" என்று ஆதரவாய் அழைத்தான். இந்தத் தூரதேசத்தில் இவ்வளவு அன்புடன் நம்மை அழைப்பது யாராக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டே அவனிடம் போக, அந்தப் போர்வீரன் நீ யாரப்பா, எந்த ஊர், எங்கே போகிறாய்? என்று வினவினான். அதை கேட்டவுடன் கிருஷ்ணசிங்கு ஒன்றும் தெரியாதவன் போல அபிநயித்து, "ஐயா நான் தாய்தகப்பன் இல்லாத அநாதை" என்று சொன்னான். இபபடி இவர்கள் பேசிக்கொண்டு இருக்கையில் சந்திரமுகி தாகசாந்திக்காக வெளியேவந்தாள். அநாதைபோல் காணப்பட்டாலும் அதி வாலிபனும் ஒப்பில்லாத ரூபவானும் இருந்த கிருஷ்ணசிங்கைச் சற்று நேரம் உற்றுப்பார்த்து "நீ யாரபபா" என்று வினவினாள். போர்வீரனிடம் சொன்னதுபோலவே இவளிடமும் தான் அநாதை என்று சொல்லிவிட்டான். இவ்வளவு சௌந்தரியமுள்ளவன் அநாதை என்று கேட்கவே ராஜகுமாரத்தி மனமிரங்கி "ஆனால் நீ என்னிடம் வேலைக்கு அமருகையா? நான் உனக்குச் சமமாய் உன்னை நடத்திவருகிறேன்; கஷ்டமான வேலை உனக்கு நான் ஒன்றும் இடுகிறதில்லை. நான் அரண்மனையிலிருந்து கலாசாலைக்கு வரும்பொழுதும் கலாசாலையிலிருந்து அரண்மனைக்குப் போகும்பொழுதும் என் பினனே என் புஸ்தகத்தூக்கை எடுத்துவரத் தூக்குத்தூக்கி ஒருவன் வேண்டியிருக்கிறது. அந்த வேலையைச் செய்துகொண்டு நீ என்னிடம் ஸௌக்கியமாய் இருக்கலாம்" என்றாள். இதைக் கேட்டவுடன் கிருஷ்ணசிங்கு இதைவிட நமக்கு நல்ல சமயம் கிடைப்பது துர்லபம் என்றெண்ணி உடனே "அப்படியே ஆகட்டும்" என்று அந்தக்ஷணமே அவள் பின்னே சென்று தூக்குததூக்கி வேலையை ஒபபுக்கொண்டான். இநத வேலையாளை நியமித்துக்கொண்டதற்குத் தகப்பனுடைய உத்தரவையும் சந்திரமுகி பெற்றுககொண்டாள். அன்று முதல் ராஜகுமாரத்தியோடுகூட அவன் இஷ்டமே போஜனமும் விலை உயர்ந்த ஆடை ஆபரணஙகளும் அளித்து, இன்னும் பல மரியாதைகளும் தூககுத்தூககி கிருஷ்ணசிங்குக்கு நடத்தப்பட்டுவந்தன. தூக்குத்தூக்குகிற

தொழில் ஒன்றைத்தவிர மற்ற விஷயங்களில் அவனுக்கு ராஜமரியாதைகள் நடந்துவந்தன. அந்தப்புரத்தில் இவ்வளவு சிறுபையனை தாராளமாகப் போக வரச்செய்வதைப் பார்த்தால மஹாராஜா ஒருகால் தன் பெண்ணையே இவனுக்குக் கடைசியாய் மணம்செய்துகொடுக்க உத்தேசித்திருக்கலாம் என்றுகூட ஜனங்கள் ஒருவருக்கொருவர் ரகசியமாய் பேசிக்கொண்டார்கள். அப்படி ஜனங்கள் பேசுவதற்குத் தூக்குத்தூக்கியின் அழகானது அநுகுணமாயிருந்த போதிலும் அவன் ஒரு பெரிய மூட்டாள் என்று எல்லாரும் எண்ணும் படி அவன் நடந்துவந்தமையால், அப்படிப்பட்ட மூடனுக்குச் சந்திரமுகியை மண்டலேச்சுவரர் கொடுப்பாரா என்று ஸந்தேகிக்கவேண்டியதாகவும் இருந்தது. கிருஷ்ணசிங்கு தான் தூக்குத்தூக்கி வேலையில் அமர்ந்த நாள்முதல் விதூஷகனைப்போல் நடந்துகொண்டது வாஸ்தவமே. "எழுதப் படிக்க ஏதாவது தெரியுமா" என்று மந்திரிகுமாரனாகிய ராமசந்திரன் ஒரு நாள் கேட்டபொழுது "அதுக்கும நமக்கும் வெகுதூரம், அந்த சனி ஒன்றும் எனக்குத் தெரியாது" என்று சொன்னான். ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களிலும் ஒன்றும் தெரியாதவன்போல் கிருஷ்ணசிங்கு நடந்துவந்தபடியால் அவனைப்பற்றி எல்லாரும் அப்படி எண்ணவேண்டியதாயிற்று. சந்திரமுகியும் அவனை அப்படியே நினைத்திருந்தாள்; ஆயினும் அதற்காக அவனிடத்தில் விசுவாஸத்தையாவது போஷணவிஷயங்களையாவது அவள் குறைக்கவே இல்லை. வெகு அந்யோந்யமாயும் அன்பாயும் இருந்தாள்; ஆயினும் அவள் மனதில் அவனைக் கலியாணம்செய்துகொள்ளவேண்டும் என்றாவது, அல்லது வேறுவிதமான கெட்ட எண்ணங்களாவது உண்மையாய் இல்லவேயில்லை. கிருஷ்ணசிங்குமாத்திரம் தான் அவளைப்போன்ற அல்லது அவளுக்கும் மேலான புத்திமான்தான் என்று கொஞ்சம் காட்டியிருந்தால் அவள் அவனை மணம்புரிய எண்ணம்கொண்டிருக்கக்கூடும். இவைகள் இப்படியிருக்க மண்டலேச்சுவரனுக்குமாத்திரம தன் மகளைக் கிருஷ்ணசிங்குக்கே கடைசியாய்க் கலியாணம் செய்துவைத்துவிடுவோம் என்னும் எண்ணம் கொஞ்சமுண்டு. எவ்வளவு மூட்டாளாயிருந்தபோதிலும் ஆள் கண்ணுக்கு வெகு லக்ஷணமாயிருப்பதினாலேயும், தன் குமாரத்திக்குச் சரியான அழகுள்ள வாலிபன் கிடைப்பது துர்லபமென்று எண்ணினபடியினாலேயும், சந்திரமுகி அதிபுத்திசாலியாகையால் புருஷஸஹாயம் இல்லாமலே தனக்குப் பிற்காலம் ராஜ்யபாரத்தை வஹிக்கலாம் என்று தோன்றினபடியினாலேயும் மண்டலேச்சுவரருக்கு இந்தமாதிரியான உத்தேசமிருந்தது. இப்படி உத்தேசித்திருந்தபடியால்தான் கிருஷ்ணசிங்குக்கும் சந்திரமுகிக்கும் உண்டாகும் அந்யோந்யத்தை மஹாராஜன் கண்டிக்காமல் கண்ணோக்கமாய் விட்டுவந்தார். அப்படியானால் கிருஷ்ணசிங்கை ஏன் படிப்பிக்கவில்லை என்று கேட்டால், ஒருகால் இவனை மணம்புரிவிக்கத் தான் கொண்ட எண்ணம் நிச்சயமாய் ஜனங்கள் மனதில் பதிந்துபோமோ என்று நினைத்து இருந்தார் என்று சொல்லலாம்; கதைக்கு காலில்லை என்றும் சொல்லலாம்.

இந்தமாதிரியே ஏழுவருஷகாலம் சென்றன. சந்திரமுகி தன்னுடைய பதினாறும் வயதில் ப்ரௌடையானாள். வீடு தீண்டக்கூடாத மூன்றுநாள் மட்டில் தனியேயிருந்து பிறகு வழக்கம்போலவே கலாசாலைக்குப் போய்க் கொண்டேவந்தாள். மந்திரிகுமாரனாகிய ராமசந்திரன் வெகுகாலமாய்ச் சந்திரமுகியின்பேரில் பிரீதிவைத்திருந்தான். இரண்டொருதடவை "என்னை விவாகம்செய்துகொள்வாயா?" என்று வாய்விட்டுக் கேட்டிருப்பதுமுண்டு

அதற்கு ராஜகுமாரத்தி அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டதும் உண்டு.

சந்திரமுகியானவள் ப்ரௌடையானபின் கலாசாலைக்கு வந்துகொண்டிருக்கும் ஒருநாள் ராமசந்திரன் பள்ளிக்கூடம் முடியும் முன்னமே தலைவலி என்று சாக்குச்சொல்லி இரண்டுநாழிகை உத்தரவு வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போகாமல் ராஜகுமாரத்தி வரும் வழியை எதிர்பார்த்தவனாய் ஒரு தேர்முட்டியில் உட்கார்ந்திருந்தான். போய் உட்கார்ந்த க்ஷணத்துக்கெல்லாம் முன்பு தூக்கை எடுத்துக்கொண்டு தூக்குத்தூக்கியும் சந்திரமுகியும் அவள் பின்னால் நூறு போர்வீரர்களும் வந்தனர். அதுகண்டு கண்குளிர்ந்து மந்திரிகுமாரன் எதிர்சென்று சந்திரமுகியை நோக்கி, நான் உன்னிடத்தில் சில சங்கதிகள் பேசவேண்டும்; தூக்குத்தூக்கியைக் கொஞ்சம் முன்னாலும், போர்வீரர்களைப் பின்னாலும் போகச்செய்வாயா என்றான். அவள் அப்படியே செய்து தேர்முட்டியருகே வந்தாள். முன்னால் ஓடுவது போல் தூக்குத்தூக்கி அபிநயித்து இவர்கள் இருவரும் தேர்முட்டியண்டை உட்காரப்பார்த்துத் திரும்பி இவர்களறியாமல் ஓடிவந்து மறுபக்கமாய்த் தேரிலேறி இவர்கள் ஸம்பாஷணையை உற்றுக்கேட்க உட்கார்ந்துவிட்டான். இவன் வந்து உட்கார்ந்தபிறகு ராமசந்திரன் சந்திரமுகியைப்பார்த்துச் சொன்னதாவது: "சந்திரமுகீ! உனக்கும் நமக்கும் முன்னமே பேச்சாயிருக்கிறதல்லவா? இதுவரையில் நீ ப்ரௌடையாகவில்லை என்று காத்திருந்தேன்; இனி என்னசொல்லுகிறாய்" என்றான். சந்திரமுகி, "அப்படியே செய்வதில் எனக்கு ஆக்ஷேபமில்லை; ஆனால் நாம் இருவரும் இந்த ஊரில் கலியாணஞ்செய்துகொள்வது அஸாத்தியமானவிஷயம். என் தகப்பனாருக்கு என்னை அதிஸௌந்தரியமுள்ள ஒருவருக்குக் கொடுக்க அபிப்பிராயமாகையால் உங்களுக்குக் கொடுக்கமாட்டார்; ஆதலின் நாம் இருவரும் இந்த ஊரைவிட்டு வேண்டுமான திரவியத்துடன் வேறு ஊர்போய் அங்கே கலியாணஞ்செய்துகொண்டு சுகமாயிருப்போம். இன்று எட்டாநாள் ஞாயிற்றுக்கிழமைக்குள் ஒருவரும் அறியாமல் நான் எவ்வளவுபணம் அனுப்பக்கூடுமோ அவ்வளவு அனுப்புகிறேன். நீங்களும் உங்களால் எவ்வளவு கொண்டுவரலாமோ அவ்வளவு கொண்டுவாருங்கள்" என்று சொல்லி, அன்று எட்டாநாள் ஞாயிற்றுக்கிழமை ஓடிப்போகத் தீர்மானித்தார்கள். பிறகு படிப்புவிஷயமாய்ப் பேச ஆரம்பித்ததைக் கண்டு இனி நாம் இருக்கக்கூடாதென்று நிச்சயித்துத் தேரைவிட்டுத் தூக்குத்தூக்கி மெதுவாய் இறங்கி எவ்வளவுதூரம் போயிருக்கலாமோ அவ்வளவு தூரத்துக்குக் கொஞ்சம் கூடவே ஓடிப்போய்விட்டான்.

நடக்கிற ஸங்கதி இன்னதென்று தெரியாமல் படிப்பு விஷயமாய்த்தான் பேசிக்கொள்வார்களென்று போர்வீரர்கள் பின்னே ஒதுங்கியிருந்தார்கள். பேச்செல்லாம் முடிந்து நாளை நிச்சயித்துவிட்டுத் தாங்கள் இருவரும் செய்த ஸங்கல்பம் ஒரு பிராணிக்குக்கூட தெரிந்திருக்கமாட்டாதென்ற எண்ணத்துடன் சந்திரமுகியும் ராமசந்திரனும் தம்தம் அரண்மனைசேர்ந்தார்கள்.

இரவு முழுதும் சுகமாகவே கழிந்தது. பொழுதுவிடிந்தவுடன் தூக்குத்தூக்கியானவன் சந்திரமுகியைவிட்டுக் கொஞ்சம் பிரிந்து மண்டலேச்வரரிருக்கும் கொலுமண்டபத்தண்டை வந்தான். அங்கே மகாராஜனிடம் சென்று "சக்கரவர்த்தியே நான் ரகசியத்தில் தங்களிடம் சிறிதுபேச அபிப்பிராயப்பட்டிருப்பதால் எனக்கு அநுமதிகொடுக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான். இதைக் கேட்டதும் மண்டலாதிபன் ஆநந்தமடைந்து

எல்லாரையும் அறையை விட்டுப் போகச்சொல்லித் தானும் வீரஸிம்ஹாஸநத்தை விட்டு நாற்காலியிலுட்கார்ந்து இனி மாப்பிள்ளையாகப்போகிற தூக்குத்தூக்கிக்கு ஸமமான ஆஸநம்கொடுத்து ஸமாசாரம் என்னவென்று கேட்டார். தூக்குத்தூக்கி அதிக தந்திரசாலியாகையால் சக்கரவர்த்தி தன்னிடம் வைத்திருக்கும் அன்பு அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனதுபற்றிக் கோபம் கொண்டவன்போல் காட்டி "தாங்கள் அப்பியசித்திருக்கும் ராஜநீதிமுறைமை இப்போது நடக்கிறபடிதானோ" என்றான். தலைகால் இல்லாமல் இப்படிக் கேட்டதையும் ராஜநீதியில ஒன்றும் தெரியாத தூக்குத்தூக்கி "தன்னை வினவினதையும் கேட்டு வியப்புற்று "நீ கேட்கும் கேள்வி எதைக்குறித்து" என்று மஹா மண்டலேச்சுவரன் வினவ, அதற்குத் தூக்குத்தூக்கி அரசர்கள் தங்கள் குமாரத்திகளை எப்படி படிப்பிக்கவேண்டியது; தாங்கள் அறிவீர்களா?" என்றான். அதைக்கேட்டு மஹாராஜன் "இவன் முட்டாள் என்றெண்ணி மோசம்போனோமே, இவன் இப்பொழுது கேட்ட ப்ரசனத்தின் அழகொன்றே இவன் புத்தியை வெளியிடப்போதும். நல்லது இவனையே கேள்விக்கு மறுமொழி சொல்லச்சொல்வோம" என்று யோசித்து "அந்தவிஷயம் எனக்குத் தெரியாது நீயே சொல்லவேண்டும்" என, தூக்குத்தூக்கி "அரசர்கள் தங்கள குமாரத்திகளை ஐந்துவயதுமுதல் ஏழுவயதுவரையில் வெளியில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம் என்றும், பிறகு ஏழுவயதுமுதல் ப்ரௌடையாகும்வரையில் வெளியிலனுப்புவதை நிறுத்தி உபாத்தியாயனை அரண்மனைக்கு வரவழைத்துப் பாடம் கற்பிக்கவேண்டுமென்றும், ப்ரௌடையானபிறகும் ராஜகுமாரத்திகளுக்கு உபாத்தியாயர்கள் கற்பித்துத்தான் படிக்கவேண்டுமென்றிருந்தால் திரைபோட்டுக்கொண்டு திரையின் ஒருபக்கம் உபாத்தியாயரும் மற்றொருபக்கம் ராஜகுமாரத்தியுமாய்ப் படிக்கவேண்டுமென்றும் வெகு ராஜநீதிகளில் சொல்லியிருக்கின்றன. இவைகளையெல்லாம் தாங்கள் அதிக்கிரமித்ததுமல்லாமல் ப்ரௌடையானபிறகுகூட உபாத்தியாயனை வீட்டுக்கு வரவழைக்காமல் ராஜகுமாரத்தியைக் கலாசாலைக்கு அனுப்பிவந்தீர்கள். இவைகளின் பலன் சீக்கிரம் ஒருவாரத்துகளுள்ளாக நீங்களே அனுபவிக்கப்போகிறீர்கள்" என்று முடித்தான். இவைகளைக் கேட்டு மண்டலேச்சுவரன் திடுக்கிட்டுச் சங்கதிகளை விஸ்தாரமாய்ச் சொல்லக் கட்டளையிட, தூக்குத்தூக்கியாகிய கிருஷ்ணசிங்கு நடந்ததை நடந்தபடிசொல்லி முடித்தான். இவனுடைய சாமர்த்தியத்தையும் புத்திக்கூர்மையையும் கண்டு மண்டலேச்சுவரன் மிகவும் மகிழ்ந்து "நான் இனி அப்படி நடக்காமலிருக்கும்படி அதற்குவேண்டிய ஜாக்கிரதை செய்கிறேன். நீமட்டும் இந்த ஸங்கதி ஒருவரிடத்திலும் சொல்லாமல் உன் மனதிலேயே ரகசியமாய் வைத்திருப்பாயாக" என்றுசொல்லித் தூக்குத்தூக்கியை அனுப்பிவிட்டான்.

(இன்னும் வரும்.)

கலகத்தை அடக்கும் ஔஷதி.

பிழைசெய்தவனுடைய குற்றத்தைப் பொறுக்கும்படி பிழைசெய்யாதவனை தூண்டுவதே கலகத்தை அடக்கிச் சமாதானஞ்செய்வதற்கு முக்கியமான மருந்து என ஒருகால் ஓர் நல்ல மந்திரி சொல்லியிருக்கிறார். சாந்தமே பிரதானமென மேற்கொண்டிருக்கும் ஒருவனை மற்றொருவர் நோக்கி, ஐயா, உமக்கு எங்ஙனம் சச்சரவினின்றும் விட்டுவிலகச் சாத்தியப்பட்டிருக்கின்றதென வினவ, அவர், சண்டைமுழுவதும் வெகுண்டவன் பங்கேயன்றி நமக்கு உரியதன்று என நான் நினைத்திருப்பதனாலேதான் என்று சாந்தமாகச் சொன்னார்.

ஆபரிக்காதேசத்தில் ஒருவன் தன் வீட்டுக்குச் சமீபத்திலிருந்த மற்றொருவனைப் பார்க்கபபோயிருந்தான். அவ்வீட்டில் பெண்சாதியும் புருஷனும் முன்னே எப்பொழுதும் சச்சரவுபட்டுக்கொண்டிருந்ததுபோய், அபபொழுது மிகவும ஒற்றுமையாயிருந்தார்கள். அது தெரிந்து அவன் அவர்களைப்பார்த்து, நீங்கள் இப்பொழுது எங்ஙனம் சாந்தமாய் வாழ வசப்பட்டீர்கள் என்று வினவ, அவ்வீட்டுக்காரன் "ஐயா சிலவேளை என் பெண்சாதிக்கு விருப்பமில்லாத சில வார்த்தைகளை யான் சொல்லுவேன்; அவளும் எனக்கு இஷ்டமில்லாத சிலவற்றைச் சொல்லவாவது சொலலுவாள், அல்லது செய்யவாவது செய்வாள். அப்பொழுது நாங்கள் கலகப்படும்படி வரும். இப்பொழுதோ அப்படிப்பட்ட வேளைகளில் ஒருவர்க்கொருவர் கைகுவிக்கிக்கொண்டு கடவுளை தோத்திரஞ்செய்ய ஆரம்பிக்கிறோம். உடனே எங்களுக்கு அமைதியுண்டாகின்றது" என்றனன். ஆ! அது சரியே! நமக்குச் சச்சரவு உண்டாகுமென்று தோற்றுமபோது, சற்று நிதானித்துத் தோத்திரஞ்செய்யமாத்திரம் துவக்கினால், கோபாக்கினி வளமாய் எழும்பி வெளிவருமுன்னமே சமனமாகிவிடும்.

ஓர் கீழ்நாட்டரசன் புத்திமான்களாகிய தன் மந்திரிகளில் இருவரைப் பார்த்து: "மந்திரிகளே, நான் என் ஜனங்களுக்கு எவ்விதத்தில் மிகுந்த நன்மைசெய்யவும், சந்தோஷப்படுத்தவும் கூடுமோ அதனைச் சொல்லவேண்டுமென்று கேட்டு, அதற்கு உத்தரம் யோசித்துச்சொல்லும்படி அவ்விருவர்க்கும் இரண்டுமாதகாலம் தவணை கொடுத்தான். அதன் முடிவில் அந்தப் புத்திமான்கள் அரசன் சந்நிதானத்துக்கு வந்தனர். அவ்விருவரில் ஒருவன், அரசன் குடிகளைப் பாக்கியவான்களாகச் செய்வதற்கு வேண்டியவையெனத் தனக்குத்தோற்றிய இருநூறு விதிகளையும், அப்பொழுது கடிதாசிக்குப் பதி

லாக அந்நாட்டில் வழங்கிவந்த ஒருவகை மரப்பட்டைகளில் எழுதிக்கொண்டு அவற்றைச் சுருளாகச சுருட்டித் தோள்மேலிட்டுச் சுமந்துவந்தான். மற்றொருவனோவென்றால், தன் மனதில் ஓர் சாதுரியமான எண்ணத்துடன் வெறுங்கையனாய் எதிர்வந்து நின்றான். அவர்களுள் ஒருவன் முதலில அவவிருநூறு திட்டங்களேயும் படிக்கக்கேட்டு அரசன் அயாவுற்று, அவைகளேக் கேட்டவுடன் மற்றொருவனுடைய ஆலோசனையை வினவினான். அதற்கு அவன் "கடவுளே நேசிக்க" என்னுமிரண்டு சிறிய வார்த்தைகளேச் சொல்லி நிறுத்திவிட்டான்.

அதற்கு அரசன் "நீர் இப்படிச் சொன்னீரே இதன் கருத்தென்ன? நான் என் குடிகளே எங்ஙனம் பாக்கியவான்களாகச் செய்திடலாம் என்று உம்மைக் கேட்டேனே ஒழிய சுவாமியைக்குறித்து நான் என்னசெய்யவேண்டியதெனக் கேட்கவில்லையே" என்றனன்.

அதற்கு அந்தப் பண்டிதன் "உண்மையே, கடவுளேப் பூரணமாய் நேசித்தால் உமக்கும் உம்முடைய குடிகளுக்கும் மிகவும் விசேஷமான பாக்கியம் உண்டாகும்" என்று சமாதானமசொன்னான். அவன் சொன்னது மிகவும் ஏற்ற சமாதானமே.

"தெய்வமிகழேல்" என்றபடி கடவுளேப் பழிக்காமல் தெய்வபக்தியுடையவர்களாகி அவரவர் செய்யவேண்டிய கடமைகளேத் தவறாமல செய்துகொண்டு வருபவர்களுக்கு ஒருநாளும் எவ்விதமான குறைவும் நேரிடாது.

பெரியோர்களேப் பெருமைப்படுத்தல்.

ஏவராயினும் பெரியோர் சிறியோர் என்ற தாரதம்யமறிந்து அதற்கேற்றபடி நடப்பார்களாயின், அப்பொழுது அவர்கள் புத்திமான்களென்று யாவராலும் கொண்டாடப்படுவது மாத்திரமேயன்றி, அதற்குத் தகுந்த பயனேயும் பெறுவார்கள். அதை விட்டுச் செல்வத்தினால் மிக்க செருக்கடைந்து, நாம் மிகுந்த பொருள் படைத்திருக்கிறோம்; மற்றவர்களெல்லோரும் நமக்குக் கீழ்ப்பட்டவர்களே; நாம் எதுசெய்தாலும் செல்லும்; நம்மை ஏனென்று கேட்பார் எவருமில்லையென்று எண்ணிக கண்தெரியாமல் தம் மனம் போனபடி நடப்பார்களாயின், தேவேந்திரனேபயோன்றவர்களானாலும் அவர்களுக்குக் கெடுதிவராமல் தப்பாது. ஆதலின், ஒருவர்க்கொருவர் இருக்கின்ற தாரதம்யமறிந்து அவரவரது தக்கபடி கவுரவப்படுத்தித் தாமும் அவர்களால் சம்மானிக்கப்படுவது யாவர்க்

கும் நன்மையாயிருக்கின்றது. இதற்குத் திருஷ்டாந்தமான கதையொன்று உண்டு:

முற்காலத்திலே பரதவம்சத்திற் பிறந்த அரசர்களில் மிகப் பிரசித்திபெற்றவர்களான பாண்டவர்கள் தம் பெரியதகப்பனுருடைய புத்திரர்களான துரியோதனாதியருடன் சூதாடித் தோற்று நாட்டைத் துறந்து வனவாஸம் செய்யப்போனபோது, இமயமலையை அடுத்த ஒரு காட்டில் ஓரிடத்திலே ஆச்சிரமம் கட்டிக்கொண்டு வசித்திருந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அப்பாண்டவர்களுள் இரண்டாவனான பீமசேனன் வேடிக்கையாக வேட்டையாடிக்கொண்டு ஒரு கணவாயில் சென்றான். அங்கே மிகப் பயங்கரமாய்ப் பிளந்துகொண்டு வெளிக்கிளம்புகிற விஷாக்கினியின் புகைபோன்ற பருமூச்சினால் எதிரிலுள்ள செடிகொடிகளெல்லாம் கன்றிப்போம்படிச் செய்துகொண்டு, சந்திரப்பிறைபோன்ற கோரைபற்களும், நெருப்புத்துணிக்கைபோல மினுமினுக்கின்ற கண்களும், அக்கினிச்சுவாலைபோல அடிக்கடி வெளியேகாணப்படுகின்ற நாக்குகளும், மஞ்சள்நிறமான உடலும் உடையதாய் மிகப்பசியினால் இரைக்காக வாய்திறந்துகொண்டு இருக்கும் ஒரு மலைப்பாம்பின் வாயில் அகப்பட்டுக்கொண்டான். அப்பொழுது அந்தப் பாம்பு அவனை விழுங்கும்படியாக அவனுடம்பில் நன்றாய்ச் சுற்றிக்கொண்டு தன் முகத்தை அவன் முகத்துக்கு எதிராகக் கொண்டுவைத்து நீட்ட, அவன் பிரமித்து அதன் பலத்தைக்கண்டு ஆச்சரியமடைந்து, இது சாதாரணமான பாம்பன்று; சாதாரணமான பாம்புக்கு இத்தனை வலிமையேது? என்று ஆலோசித்து திகிற்படாமல் அந்தப் பாம்பைப்பார்த்து, ஓ சர்ப்பராஜனே, நீயாரோ எனக்குத் தெரியவில்லை; நான் பரதவம்சத்திற்பிறந்த உத்தமரான பாண்டு மகாராஜனுடைய குமாரனும், தருமநெறிதவறாமல் நடப்பதுபற்றித் தருமராஜனெனப் பேர்பெற்ற யுதிஷ்டிரருடைய தம்பியுமானவன்; பகைவர்களுக்குப் பயம் உண்டாக்குவதுபற்றிப் பீமனெனப் பெயர்பெற்றவன்; ஆயிரம மதயானைகளுக்குள்ள பலமும் மிகுந்த சாமர்த்தியமுமுடையவன்; சிங்கம யானைமுதலிய கொடிய மிருகங்களை அவலீலையாய்ப்பிடித்து வதைக்கின்ற பராக்கிரமமுள்ளவன். இப்படிப்பட்ட என்னை மூச்சுக்கூட விடக்கூடாமல் திக்குமுக்காடும்படி சுற்றிப்பிடித்துக்கொண்ட நீ ஒரு சாதாரணமான சர்ப்பமென்று எனக்குச் சிறிதும் தோன்றவில்லை. நீ அப்படி ஒரு சாதாரணமான சர்ப்பமேயானால் உனக்கு இவ்வளவு பலம் எங்கிருந்துவந்தது? இது உனக்கு இயற்கையான வல்லமையோ, அல்லது வரப்பிரசாதத்தால் கிடைத்த சக்தியோ? எனக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்று கேட்டான்.

அதுகேட்டு அந்தப் பாம்பு ஊர்வனவற்றில் சேர்ந்த ஒரு பிராணியாயிருந்தும், பூர்வஜன்மஸ்மரணை அழியாமல் மனிதர்

போலப் பேசுந்திறமையும் உண்டாயிருக்கும்படியாக வரம்பெற்றிருந்தமையால், பீமசேனனுடன் அடியில்வருமாறு சொல்ல ஆரம்பித்தது: ஓ ராஜகுமாரனே, இது எனக்கு வரப்பிரசாதத்தினால் கிடைத்த சக்தியேயன்றி இயற்கையான சக்தியல்ல. நான் முன்னே ஒரு அரசன்; பல வேள்விகள் புரிந்து இந்திரப்பட்டம் பெற்றவன், ஆயினும் பெரியோர்களான மகரிஷிகளை அவமதித்தேன்; அவர்கள் அதன்மேல் மிகக்கோபித்து என்னைச் சபித்தனர். அதனால் எனக்கு இந்த சாப்பஜன்மம் வந்தது. இந்தச் சாபம் நேர்ந்தகாலத்தில நான் அம்முனிவர்களைப் பிரார்த்தித்து, யானை சிங்கம் புலி முதலிய மிருகங்களில் ஏதாயினும் எவ்வளவு பலமுடையதாயினும், என் கையில் அகப்பட்டுக்கொண்டவுடனே பலமழிந்து எனக்கு இரையாம்படியாகவும், பூர்வஜன்மஸ்மரணை மாறாதிருக்கும்படியாகவும் அவர்களிடத்தினின்றும் வரம்பெற்றேன். எப்படிப்பட்ட பெருமைபெற்றவனாயின் என்ன? கடைசியில் என் கதி இப்படியாக முடிந்தது என்று தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு மிகவும் துக்கப்படலாயிற்று.

அதுகேட்டுப் பீமசேனன் கொஞ்சம் அதிகமாய்த் தைரியங்கொண்டவனாகி, ஐயா, தெய்வசங்கற்பத்தால் நேரிட்ட துன்பங்களைக்கண்டு தன்னைநிந்தித்துக்கொள்வது உசிதமன்று; இன்பமாயினும் துன்பமாயினும் நேரிடும்போது தைரியத்தைக் கைவிடாமல் சமபுத்தியுடையவர்களாக நடப்பதே பெரியோர்களுடைய சுபாவமாம். எவரானாலும் புருஷப்பிரயத்தினத்தால் தெய்வசங்கற்பத்தைத் தவிர்ப்பது கூடாதகாரியம். விதியை மதியால் வெல்லக்கூடாது என்று பெரியோர்களும் சொல்லியிருக்கிறார்களே. எவ்வளவோ பலசாலியான நான் இதோ சிறிதும் பலமில்லாதவன்போல் இப்பொழுது உன் கையில் சிக்கிக்கொண்டு தவிக்கிறேன் பார்த்தாயா? உன்னிடத்தினின்றும் தப்பித்துக்கொண்டு பிழைப்பேனென்ற ஆசை எனக்கு எள்ளளவுமில்லை. இல்லாமற்போனாலும், இப்போது ஐயோ! ராஜ்யசம்பத்தையெல்லாம் இழந்து மனிதர்கள் வசிப்பதற்கு யோக்கியமாகாத பயங்கரமான இப்பெருங்காட்டில் வந்து வாசம்செய்கின்ற என் அண்ணன் தம்பிமார்கள் என்னைக் காணாமல் தவித்துத் துக்கப்படுவார்களேயென்ற விசாரமேயன்றி, உன் கையில் அகப்பட்டுக்கொண்டு உயிரிழந்துபோகிறேனேயென்ற சிந்தை எனக்குச் சிறிதளவுமில்லை; இப்பூமியில் வந்து பிறந்தவன் இன்று இல்லாமற்போனாலும் நூறாண்டு கழித்தாயினும் ஒருநாள் இறக்கவேண்டுவதுதானே என்று சொன்னான்.

இவ்வாறு பீமசேனன் இங்கே பாம்பின்கையில் அகப்பட்டுக்கொண்டாலும் தைரியத்தைவிடாமல் பாம்போடு போராடிக்கொண்டிருக்கையில், அங்கே ஆச்சிரமத்தில் தருமபுத்திரன் பல தவசிகளோடுகூடி விநோதமாய்க் களித்துப் பேசிக்கொண்டிருக்கும

போது, திடீரென்று அரிஷ்டத்தைக் குறிப்பிப்பதான நரி யூளையைக்கேட்டுத் திகிற்பட்டு, உடனே வலதுபுஜமும் துடிக்கக்கண்டு ஏதோ ஒரு பெரிய ஆபத்து விளையும்போலிருக்கிறதென்று நிச்சயித்துத் தன் தம்பிமார்களைத் தேடிப்பார்த்தான்; அவர்களுள் பீமசேனன காணப்படவில்லை. அதனால் தருமபுத்திரன் மிக்க மனவிசாரங்கொண்டு, ஆச்சிரமத்தில் துரௌபதியைக் காத்துக்கொண்டிருக்கும்படி தம்பிமார்களுக்குக் கட்டளையிட்டு, தவுமியர் முதலான முனிவர்களோடுகூடப் புறப்பட்டு அக்காட்டில் பீமசேனனைத் தேடிக்கொண்டு வெகுதூரம்போயினான். அங்கே பீமன் ஒருகணவாயில் மலைப்பாம்பினால் பிடிபட்டிருப்பதைக்கண்டு தருமபுத்திரன், ஆயிரம்யானைபலமுள்ள என் தம்பி இப்பொழுது பலவீனனான ஒரு அற்பமனிதன்போலப் பாம்பின்கையில் பிடிபட்டு விடுவித்துக் கொள்ளமாட்டாமல் அல்லாடிக்கொண்டிருக்கிறானே! இது மிகவும் ஆச்சரியமானது! 'பட்டகாலேபடும், கெட்டகுடியேகெடும்' என்றவண்ணமாக வருகிற விபத்துக்களெல்லாம் ஒன்றின்மேலொன்றாய் நமக்குத் தானாவரவேண்டும் என்று விசனப்பட்டுக்கொண்டே அவனண்டைபோய்ப் பாம்பைநோக்கி, ஐயா, நீ பாம்புவடிவம் பூண்டுவந்த தேவதையோ, யக்ஷனோ, அல்லது ராக்ஷதனோ யாரோ எனக்குத் தெரியவில்லை. நான் பாண்டுமகாராஜாவினுடைய புத்திரன், யுதிஷ்டிரனென்னும் பேருடையவன். என் தம்பியான இம்மகாசூரனை நீ எப்படி பிடித்துக்கொண்டாயோ எனக்குத் தெரியவில்லை. இவனை நீ இரைக்காகப் பிடித்துக்கொண்டிருக்கும்பக்ஷத்தில் உன் பசி தீரும்படியாக வேண்டுமளவு மாமிசம் உனக்கு நான் தேடிக்கொண்டுவந்து கொடுக்கிறேன்; இவனை விட்டுவிடு என்று வேண்டிக்கொண்டான். அப்பொழுது அப்பாம்பு தருமராஜனைநோக்கி, ஓ பாரதகுலதிலகனே, நான் உன் பூர்விகர்களுக்கெல்லாம் முற்பட்டவனான ஒரு ராஜன்; நஹுஷனென்னும் பேருடையவன்; தேவேந்திரனுக்கு ஒப்பானவன். நான் பல நற்செய்கைகள்செய்து தேவலோகத்திற்குச்சென்று தேவேந்திரபதத்தையடைந்து செல்வச் செருக்கினால் கண்தெரியாமல் பெரியோர் சிறியோர் என்ற விசாரமழிந்தவனாய் அகஸ்தியர் முதலான பிரம்மரிஷிகளை அவமானம் பண்ணினேன். அப்போது அகஸ்திய மகாமுனி என்மேல் கோபித்து, நீ மிகவும் அயோக்கியனாகி விவேகமென்பது சிறிதுமில்லாமல் மதித்து இருப்பதனால் பூலோகத்திலே மலைப்பாம்பாகி வெகுநாள் விழுந்துகிடக்கக்கடவையென்று சபித்துவிட்டார். எப்படிப்பட்டவராயினும் விதிப்பயனுக்குத் தப்பித்துக்கொள்ள முடியுமா? எல்லாவேதங்களையும் ஓதினேன்; சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிற வேள்விகள் எல்லாவற்றையும் முறைதவறாமல் செய்துமுடித்தேன்; நீதிநெறிதவறாமல் ராஜ்யபரிபாலனம் செய்தேன்; கடைசியாய்த் தேவேந்திரப்பட்டமும் ஆண்டேன்.

இவ்வளவிருந்தும் அகங்காரமாகிய இருள் என்னைச் சூழ்ந்துகொண்டதனால் நான் இந்த ஜன்மமெடுத்து வருந்தும்படியாக நேரிட்டது. ஆயினும் அம்முனிவர் சபித்தகாலத்தில் நான் மிக்க விசனமடைந்தவனாகி வணங்கி வேண்டவே, அகஸ்தியர் பூர்வஜன்மஸ்மரணை தப்பாதபடிக்கும், எவ்வளவு பலசாலியான பிராணியாயினும் என் கையில் சிக்கிக்கொண்டவுடனே பலமழிந்துபோமபடிக்கும், நான் கேட்டகேள்விகளுக்கு விடைகொடுப்பவனாலே எனக்குச் சாபவிமோசனமாகுமெனவும் வரமளித்தனர். இப்பொழுது உன் தம்பி எனக்குத் தெய்வவசமாய் இரையாக அகப்பட்டுக்கொண்டான். உனக்கு இவனை விடுவித்துக்கொள்ளவேண்டுமென்ற விருப்பமுண்டாயின், நான் கேட்கும் கேள்விகளுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு விடுவித்துக்கொண்டுபோகலாம என்றது. அதுகேட்டுத் தருமபுத்திரன், ஓ மகாநுபாவரே, தேவரீர் கேட்கின்ற கேள்விகள் எப்படிப்பட்டவையோ? அவைகளுக்குத் தகுந்த சமாதானம்சொல்ல எல்லாம் உணர்ந்தவர்களான வேதியர்களாலன்றிச் சிற்றறிவுடையோனான என்னாலாகுமா? ஆயினும் எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன் கேட்கலாமென்றான். அதுகேட்டு மிகச் சந்தோஷமடைந்து சர்ப்பரூபமுடையவனான நஹுஷன் வினவலாயினான்.

வின. எப்படிப்பட்ட குணமுள்ளவர் பிராமணர்கள்; அந்தப் பிராமணர் எவற்றை அறிந்துகொள்ளவேண்டும்.

விடை. ஸத்தியம், பொறுமை, தானம், தருமம், தவம், தயை முதலிய நற்குணங்களுள்ளவர்களாய் இந்திரியங்களை வென்று நல்வழியில்நடப்பவர்கள எவர்களோ அவர்களே பிராமணர்கள். அவர்கள் அறிந்துகொள்ளவேண்டியது என்னவெனில், சுகதுக்கங்களில் புத்திதவறாமல் என்றும் ஒரேசீராயிருக்கவேண்டும் என்பதேயாம்.

வின. இக்குணங்களும், செய்கைகளும், சூத்திரனிடத்திலிருக்குமாயின் அவன் பிராமணனாவானா? அப்படியாயின் பிராமணர், க்ஷத்திரியர் என்கிற வர்ண விபாகம் உண்டானதற்கு நிமித்தமென்ன? இவன் உயர்குலத்தோன், இவன் இழிகுலத்தோன் என்ற வழக்கச்சொல் வீணேயல்லவா?

விடை. ஏதோ ஒரு பிரமாதத்தால் எல்லா வர்ணங்களும் சங்கரமானபொழுது அந்தந்த வர்ணத்தாரைப் பகுத்தறியும்படி ஸ்வாயம்புவ மனுவானவர் பிராமணர் முதலியவர்களுக்குத் தொழில் வெவ்வேறாக ஏற்பாடுசெய்திருக்கிறார். மேலேசொன்ன ஸத்தியம் முதலிய குணங்கள் சூத்திரனிடத்திலிருக்குமாயின் அவன் சூத்திரர்களில் சிறந்தவனேயொழிய பிராமணனாகமாட்டான். தேவலோகத்திலுள்ள கேட்டதைக்கொடுக்கின்ற காமதேனுவாயினும் அது பசுவேயன்றி வேறல்லவே. அந்தக் குணங்கள் பிராமணனிடத்தில் இல்லாமற்போமாயின் அவன் சூத்திரனுக்கு ஒப்பானவனும்.

ஆதலின் எல்லா வர்ணத்தாரும் தங்கள் தங்கள் தருமங்கள் தப்பாமல் நடப்பதே சிறந்ததாம். செல்வம் மிகுந்தவனாயினும் தனக்கு உசிதமான செய்கைகளைச் செய்யாதவன் நீசனேயாவான். உசிதமான செய்கைகளைச் செய்துகொண்டு வருபவன் எவ்வளவு தரித்திரனானாலும் உத்தமபுருஷனாக நினைக்கப்படுவான். ஆதலின் செல்வத்தைக் காத்துக்கொள்வதினும் செய்கையைக் காத்துக்கொள்வது முக்கியமாம்.

வினா. உலகத்திற்கெல்லாம் பிரியமில்லாதகாரியஞ் செய்பவனாயினும், பொய் பேசுகின்றவனாயினும் ஜீவஹிம்சை செய்யாதவனாயின், அப்படிப்பட்டவன் நற்கதியடைவான் என்கிறார்களே; ஜீவவதை செய்யாமை அவ்வளவு சிறந்ததானதற்கு நிமித்தமென்ன?

விடை. உலகத்திற்குப் பிரியமான காரியம் செய்தல், உண்மைபேசுதல், தானஞ்செய்தல், ஜீவஹிம்ஸைசெய்யாமை ஆகிய இந்நான்கு நற்குணமும் ஸமமானவைகளே. ஆயினும் அவைகளில் ஹிம்ஸைசெய்யாமை மேம்பட்டதாம். எப்படியெனில், ஜீவன் தேவஜன்மம், மானிடஜன்மம், மிருகஜன்மம், என்னும் மூன்றுவிதமான ஜன்மங்களில் மானிடஜன்மமெடுத்துத் தானம் முதலிய நற்குணங்களுள்ளவனாயிருந்தும், ஜீவஹிம்ஸை செய்பவனாயின் மறுபடியும் விலங்குஜாதியிற்போய்ப் பிறப்பான். ஹிம்ஸைசெய்யாதிருப்பனாயின் தேவஜன்மம் பொருந்துவான். ஆதலின் அஹிம்ஸை எல்லாவற்றிலும் சிறந்ததாயிற்று.

என்றிப்படி தருமபுத்திரன் நஹுஷன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான ஸமாதானம் சொல்லவே அவன் ஸந்தோஷமும், தருமபுத்திரனிடத்தில் பிரீதியும் உடையவனாகிப் பீமனைவிட்டுவிட்டு, சாபம் நீங்கிப்போகவே திவ்வியரூபமுடையவனாகித் தருமபுத்திரனுக்குப் பலவிதமான வேதாந்த ரகசியங்களைத் தெரியச் சொல்லிவிட்டுத் தான் சுவர்க்கலோகம்போய்ச் சேர்ந்தான். தருமபுத்திரனும் மிக்க மகிழ்ச்சிகொண்டவனாய்த் தன் தம்பியை அழைத்துக்கொண்டு தன்னுடன்வந்த முனிவர்களோடுகூட ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தான்.

ஆதலின் யுக்தாயுக்தங்களை நன்கு ஆராய்ந்து பெரியோர் சிறியோர் என்றவேற்றுமையை நன்றாய் உணர்ந்து அதற்கேற்றபடி நடப்பவர்களுக்கு மேன்மையும் அப்படி நடக்காதவர்களுக்குக் கீழ்மையும் தவறாமல் உண்டாகுமென்பது நிச்சயம்.

கடன்படுவதனால் வரும் கெடுதி.

"கடமுண்டு வாழாமை காண்டலினிதே" என்றபடி எப்படிப் பட்டவராயினும் எக்காலத்திலும கடன்வாங்காமல் உள்ளமட்டும் தமது கைப்பொருளைக்கொண்டு வாழ்வதே மிகவும் உத்தமமாம். "குறைக்குடம் கூத்தாடும்" என்பதுபோல் கைபபொருளின்றிக் கடன்பட்டு வாழ்பவனும் யோக்கியனாகமாட்டான். கடன்பட்டவன் யதார்த்தவாதியாயிருப்பதும கடினமே. ஆனதுபற்றியே கடனானது பொய்யைத் தன் முதுகில் தூக்கிக்கொண்டுவருகின்றதென்கிறார்கள். கடன்காரன் தான் வாங்கின கடனைக் கடன்கொடுத்தவனுக்குத் திருபபிக் கொடுக்கவேண்டியதற்குக் காலதாமதம செய்வதைபபற்றிய பல சாக்குப்போககுகள் சிருஷ்டிக்க ஆரம்பிப்பான. ஒருபோதும எங்கும் கடனே வாங்கக்கூடாதென்று ஒரே உறுதிப்பாடாயிருப்பவர்களுக்குக் கடன்வாங்காமலே வாழ்வது கூடுமான காரியந்தான். ஆயினும் முதலில் ஒருமுறை கேட்கும்போதே கடன் கிடைக்குமாயின் அவ்வண்ணமே அடுத்தடுத்துப் பலமுறை கடன்வாங்கவேண்டுமென்று ஆசை பிறக்கின்றது. பின்பு அவன் சீக்கிரமே கடன்வலைக்குள் சிக்கிக்கொண்டு மறுபடி அதை விட்டு மீள வழிதெரியாமல் அல்லாடும்படியாகின்றது. கடன்வாங்க முயல்வது பொய்சொல்ல முயல்வதுபோலவேயன்றி வேறல்ல. முதலில் ஒரு பொய்பேசினால் அதை மெய்பபிககப் பிறகு பலபொய் பேசவேண்டிவருவதுபோல், முதலில் ஒருதரம் கடன் வாங்கினால் அதைத் தொடர்ந்து பிறகு பலதரம் மேன்மேலும் கடன் வாங்கும்படி நேரிட்டுக்கொண்டேவரும்; அதை விட்டுவிலக ஒரு போதும் வழி அகப்படாது. தான் கடன்வாங்கத் துவக்கின நாள் தொடங்கித தனக்குச் சிறுமையேயொழியப் பெருமை ஒருபோதும் உண்டானதில்லை எனப் பெரியோர் ஒருவர் சொல்லியிருக்கிறார். "கடன்வாங்கினவன் மடியில் கலநெருப்பு." "கடன்வாங்கித் திரிவோன் மனங்கலங்கித் திரிவான" என்னும் பழமொழிகள் வாஸ்தவமென்று அநுபவசித்தமாய் அநேகர் அறிந்திருக்கிறார்கள். கடன்படாமல் உனக்கு அமையாதாகில் நீ எவ்வகை இன்பத்தையும் விலை கொடுத்து வாங்காதே, ஒருபொழுதும் கடன்படாதே, அதைவிட இழிவு வேறில்லை. ஆயினும் பிறர்க்குக் கடன்கொடுத்து உதவவேண்டாமென்று நான் ஒருபோதும் சொல்லத்துணியேன். அப்படிக் கடன்கொடுப்பதனால் நீ வாங்கின கடனை இறுக்கத் தடையுண்டாகுமாயின் அப்படிப்பட்ட காரியத்தில் ஒருபோதும் தலையிடாதே. எப்படிப்பட்டகாலத்திலும் ஒருபோதும் கடன்வாங்காதே என்று ஒருவர் தன் சீஷனுக்குப் புத்திபுகட்டியிருக்கிறார்.

ஒருவன் உலகத்தில் தலையெடுக்கத் துவக்கும்போதே கடன் வாங்க ஆரம்பிப்பானாயின், அவன் அவ்வளவோடு அழிந்துபோனவனே. கடன்வாங்குவது தகாதகாரியமென்றுமாத்திரம் எண்ணுதேயுங்கள். அதுவே பெருந்துக்கமென்று அநுபவத்தில் காண்பீர்கள். கடன்வாங்குபவன் உடனே தரித்திரத்துக்கு உள்ளாவான். தரித்திரமானது நன்மைசெய்யும்வழிகளை அநேகமாய் ஒழித்து, தீமைக்கு இடங்கொடாதுநிற்கும் தேகபலத்தையும் மனோபலத்தையும் மிகவும் ஒடுக்கும்; ஆதலால் நல்வழியிலேயே ஏற்ற உபாயங்களைக்கொண்டு அதை விலக்குவது நமது கடன். ஆகவே எவனிடத்திலும கடன்படாதிருப்பதே நமது முக்கியமான நோக்கமாயிருக்கவேண்டும். தரித்திரனாகாதிருப்பதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டும்; நம்மிடத்திலுள்ளது எவ்வளவு சொற்பமான பொருளாயினும் சிறுகச் செலவுசெய்து சுகமாயிருக்க வழிதேடவேண்டும். தரித்திரமானது நமது சவுக்கியத்துக்குக் கொடிய சத்துருவாம். அது நமது சுவாதீனத்தைப போக்கடித்து, சில நற்கருமங்களை நமக்குச் செய்ய அசாத்தியமாகவும், மற்றவைகளை மிகக் கடினமானவைகளாகவும் செய்துவிடும். மிதசெலவுசெய்வது மனவமைதிக்குமாத்திரமே மூலகாரணமன்று; பரோபகாரம் செய்வதற்கும் மூலமாயிருக்கின்றது. பிறர்கையைப் பார்த்துக்கொண்டிருப்பவன் எவனும் தான் பிறர்க்கு உதவிசெய்ய ஒருபோதும் வல்லவனாகமாட்டான். ஆதலின் "தன்னை மிஞ்சித் தருமம்" என்றபடி முதலில் தனக்கு வேண்டியதைத் தேடிவைத்துக்கொண்டு பிறகு இயன்றவளவு பிறர்க்கும் உதவிசெய்துவரவேண்டும்.

தன்காரியங்களைத் தானே நேருக்கு நேராகப் பார்த்துக்கொள்வதும், ரொக்கவரவு செலவு கணக்குகளை எழுதிவைத்துக்கொள்வதும் ஒவவொருவரையும் பொறுத்த கடனும். இப்படி வீட்டுக் கணக்கைச் சிறிதளவு கையாண்டுகொண்டுவருவது எவர்க்கும் மிகக உபயோகமானதாகும். நாம் சிறிது முன்யோசனைசெய்து பார்ப்போமாயின், நமது வரவுக்கு அதிகப்படாமல் செலவு செய்யக் கற்பதுமாத்திரமே போதாது; வரவுக்கு ஒருபடி குறைவாகவே செலவுசெய்துவரவேண்டுமென்று தெளிவாகும். ஆதலின் அதற்கேற்றவண்ணம நன்கு ஆராய்ச்சிசெய்து குடும்பகாரியங்களை நடத்தத்தக்க முறை ஒன்று ஏற்பாடு செய்துகொண்டாலொழிய அது எவர்க்கும் சாத்தியப்படாது. ரொக்கவரவு செலவு கணக்கு விஷயங்களில் வேலைக்காரர்களை ஒருபோதும் நம்பியிருக்கலாகாது. அவர்களை நம்பி மோசம்போனதற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு. பொருள்விஷயத்தைப்பற்றித் தங்கள் அநுபவத்தில் கண்ட உண்மைகளைப் பலர் பலவிதமாய் எழுதியிருக்கிறார்கள்:

பொருள் சம்பாதிப்பது பூமிக்குள் புதைத்துவைக்கவுமல்ல,



THE HIMALAYAS.—இமயமலை.